# உதயன்

சுடர் : 36 கதிர் : 208 | செவ்வாய்க்கிழமை | ஆனி 08 ஆம் நாள் 22 ஜூன் 2021 | வள்ளுவர் ஆண்டு 2052 | பக்கங்கள்: 20 விலை: 30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111


# தொற்று பரவும் பகுதிகள் மீண்டும் முடக்கப்படும்!

**மக்களின் கைகளிலேயே முடிவு**
**இராணுவத் தளபதி அறிவிப்பு**

கொழும்பு, ஜூன் 22
இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் அதிகமாக அடையாளம் காணப்படும் பகுதிகளுக்கு கடுமையான பயணக் கட்டுப்பாடுகளை நடைமுறைப்படுத்தவேண்டி வரலாம் என்று, கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

19 ➤

## வடக்கில் 58 பேருக்கு தொற்று

### கண்டாவளையில் மட்டும் 18

யாழ்ப்பாணம், ஜூன் 22
வடக்கில் மேலும் 58 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நேற்றுப் பகல் 444 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அவர்களில் 42

19 ➤



## சாவு 52

கொழும்பு, ஜூன் 22
இலங்கையில் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி நேற்றுமுன்தினம் 52 பேர் உயிரிழந்துள்ளனர் என்று

19 ➤

## மற்றொரு புதிய திரிபுடன் இலங்கையில் கொரோனா?

*பல்கலை ஆய்வுகூடத்தில் தீவிர ஆராய்வு*



கொழும்பு, ஜூன் 22
கொழும்பு, மாதிவெல பிரதேசத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். மாதிரியொன்றின்போது, ஒருவருக்கு அசாதாரணமான தன்மையுடைய கொவிட்-19 வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளமை இனங்காணப்பட்டுள்ளது.

19 ➤

## நாட்டில் தொற்றுப்பரவல் மிக வேகமாக அதிகரிக்கும்!

*சுகாதாரக்கொள்கை நிலையம் அறிவிப்பு*

கொழும்பு, ஜூன் 22
"நாட்டில் தற்போது பரவிவரும் திரிபடைந்த டெல்டா வைரஸின் தன்மைகளின் அடிப்படையில் நோக்கும்போது, இப்போது பின்பற்றப் பட்டு வரும் நடைமுறைகளின் கீழ் தொற்றுப் பரவல் மிகவேகமாக அதிகரிக்கும்" என்று சுகாதாரக்கொள்கைகளுக்கான நிலையத்தின் பணிப்பாளர் மருத்துவ நிபுணர் ரவி ரன்னன்

19 ➤

## வவுனியாவில் இரு பெண்கள் தொற்றால் சாவு

வவுனியா, ஜூன் 22
கொரோனாத் தொற்றால் வவுனியாவில் இரு பெண்கள் நேற்று உயிரிழந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.
வவுனியா. சூடு

19 ➤

## கஞ்சா விற்பனை: நாவற்குழியில் மூவர் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 22
யாழ்ப்பாணம் நாவற்குழி பகுதியில் கஞ்சா போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டனர் என்ற குற்

15 ➤



## வியாழேந்திரனின் மெய்ப்பாதுகாவலரின் சூட்டுக்கு ஒருவர் பலி

மட்டக்களப்பு, ஜூன் 22
இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரனின் வீட்டின் முன்பாக நேற்று மாலை மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் டிப்பர் சாரதி ஒருவர் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர். இராஜாங்க அமைச்சரின் வீட்டில் பணியிலிருந்த பொலிஸ் மெய்ப்பாதுகாவலர்

19 ➤

## அரச அலுவலர்களின் பணிமுறையில் மாற்றம்

கொழும்பு, ஜூன் 22
அத்தியாவசிய சேவை மற்றும் அத்தியாவசியம் அல்லாத சேவைக்குள் அடங்கும் அமைச்சுக்கள், நிறுவனங்கள் மற்றும் பகுதிநிலை அரச நிறுவனங்கள் என்பவை, பணியாளர்களை

19 ➤

## 90 மதுபான போத்தல்களுடன் யாழ்ப்பாணத்தில் ஐவர் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 22
யாழ். மாவட்டத்தில் சட்டவரையறையை மீறி, அதிகளவான மது

15 ➤

## கடலுணவுகளின் விற்பனைகள் அமைச்சர் டக்ளஸால் பாதிப்பு

*யாழ். தம்பாட்டி மீனவர்கள் குற்றச்சாட்டு*

யாழ்ப்பாணம், ஜூன் 22
"கடற்றொழில் ஊடாக பிடிக்கும் கடலுணவுகளை இதுவரை காலமும் சுயமாக விற்பனைசெய்து வந்தோம். இப்போது, கடற்றொழில் அமைச்சரின் தலையீடு காரணமாக எங்களால் சுயமாக கடலுணவுகளை விற்பனைசெய்ய முடியாதுள்ளது" என்று யாழ்ப்பாணம் வேலணை தம்பாட்டி

17 ➤

## மணலுடன் சென்ற டிப்பர்மீது படையினர் துப்பாக்கிச் சூடு

*ஒருவர் மருத்துவமனையில்*

கிளிநொச்சி, ஜூன் 22
கிளிநொச்சியில் மணல் ஏற்றிச்சென்ற டிப்பர் வாகனம் மீது படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் காயமடைந்தார் என்று பொலிஸார்

17 ➤

## 174 கிலோ கஞ்சாவுடன் இருவர் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 22
தொண்டமனாறு கடற்பரப்பில், 174 கிலோகிராம் கஞ்சா போதைப்

19 ➤


செய்திகள் மற்றும் விளம்பரங்களை உதயனில் பிரசுரிக்க....
செய்தி 021 493 0000 / 077 1209994
விளம்பரம் 021 493 1111 / 071 6182182


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# மக்களின் கழுத்தை நெரிக்கின்றது அரசு

### எதிர்க்கட்சித் தலைவர் விசனம்

கொழும்பு, ஜூன் 22
மக்களின் கழுத்தை நெரித்து, தனது மனிதாபிமான மற்ற தன்மையை அரசு வெளிப்படுத்தியுள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த ஆட்சிக் காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட எரிபொருள் விலைச் சூத்திரத்துக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தால், உலக சந்தையில் எரிபொருளின் விலை பெருமளவில் குறைவடைந்து 2020ஆம் ஆண்டில் அதன் அனுகூலம் மக்களுக்குக் கிடைத்திருக்கும்.

உலகின் மிகவும் அபாயகரமான தொற்றை நாடு எதிர்நோக்கியுள்ள சந்தர்ப்பத்தில், எரிபொருளின் விலையை அதிகரிக்காமல் மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு அரசு செயற்பட்டிருக்க வேண்டும்.

எரிபொருளின் விலை அதிகளவில் அதிகரிக்கப்பட்டதை அடுத்து, நாட்டில் அனைத்துத் துறைகளிலும் விலையேற்றம் இடம்பெறுவதைத் தடுக்க முடியாது. தொற்று நிலைமைக்கு மத்தியில் மக்களின் கழுத்தை நெரிப்பதன் மூலம், அரசின் மனிதாபிமானமற்ற தன்மை வெளிப்படுத்தப்பட்டுள்ளது- என்றார். (எ-4)

# அரசின் கட்டுப்பாடுகளை ஏற்றுச் செயற்பட முடியாது

### தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் எதிர்ப்பு



**கொழும்பு, ஜூன் 22**
**பொதுப் போக்குவரத்துக்கள் தொடர்பில் சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ள அறிவுறுத்தல்களை ஏற்க முடியாது என்று தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயரத்ன தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டில் முதலாவது கொரோனா அலையின் பின்னர் உரிய நிவாரணக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டால், 50 வீதமான பயணிகள் மாத்திரம் பொதுப் போக்குவரத்தில் பயணிப்பதற்கான திட்டம் ஒன்றை நாம் அரசிடம் முன்வைத்தோம். ஆனால் அரசு அது தொடர்பில் பாராமுகமாகச் செயற்பட்டது.

தற்போது எரிபொருள் விலை அதிகரிப்பை மேற்கொண்டுள்ளதுடன், கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ள எமக்கு எவ்வித நிவாரணக் கொடுப்பனவையும் வழங்கவில்லை. இந்த நிலையில் 50 வீதமான பயணிகளுக்கு மாத்திரம் போக்குவரத்துச் சேவையை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தியுள்ளமையை ஏற்றுக்கொள்ள முடியாது- என்றார். (எ-4)

# அரசுக்குக் குடைச்சல் கொடுக்கும் ஜே.வி.பி.

கொழும்பு, ஜூன் 22
எரிபொருள்களின் விலை உயர்வு மற்றும் வாழ்க்கைச்செலவு அதிகரிப்புக்கு எதிராக ஜே.வி.பியால் நாடு முழுவதும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள எதிர்ப்பு நடவடிக்கை நேற்று மாலை ஆரம்பமானது. மஹரகம நகரில் நேற்று ஆரம்பமான போராட்டம், 22, 23 மற்றும் 2 ஆம் திகதிகளிலும் நாடு முழுவதும் முன்னெடுக்கப்படவுள்ளது.

சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி ஜே.வி.பியின் செயற்குழு உறுப்பினர்களும், மாவட்ட அமைப்பாளர்களும் எதிர்ப்பு நடவடிக்கையில் பங்கேற்கவுள்ளனர்.

அதேவேளை, எரிபொருள்களின் விலை உயர்வுக்கு எதிராக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியும் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. (எ-44)

# இரு நாள்கள் மட்டுமே நாடாளுமன்று கூடும்

கொழும்பு, ஜூன் 22
ஜூன் மாதத்துக்கான 2ஆவது நாடாளுமன்றக் கூட்டத்தொடரை இரு நாளகளுக்கு மட்டும் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன்படி இன்றும், நாளையும் நாடாளுமன்றம் கூடும் என சபாநாயகர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

நாடாளுமன்ற அமர்வு நடவடிக்கைகள் தொடர்பாகத் தீர்மானிப்பதற்காக நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு நேற்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் கூடியது. இதன்போதே சபை அமர்வை இரு நாள்களுக்கு நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த இரு நாள்களிலும் காணி மற்றும் நிதி அமைச்சின் விடயதானங்கள் விவாதத்துக்கு உட்படுத்தப்படவுள்ளன.

அதேவேளை, வலு சக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை இன்று சபாநாயகரிடம் ஐக்கிய மக்கள் சக்தி கையளிக்கவுள்ளது. இதேவேளை ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நாளை நாடாளுமன்ற உறுப்பினராக சத்தியப் பிரமாணம் செய்யவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-44)





# ஆட்சியை மாற்றுவதற்கு இடமளியாராம் சம்பிக்க

### பிரபாகரனை தோற்கடித்தேன் என்றும் சுயதம்பட்டம்

கொழும்பு, ஜூன் 22
நான் பதவி, பட்டங்களுக்கு ஆசைப்படும் அரசியல்வாதி அல்லன். பிரபாகரனை தோற்கடித்தமை உட்பட பல அரசியல் புரட்சிகளில் ஈடுபட்டுள்ளேன். எதிர்காலத்திலும் ஈடுபடுவேன். தற்போதைய சூழ்நிலையில் ஆட்சிமாற்றத்துக்கான நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கமாட்டேன். இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

ஐக்கிய மக்கள் சக்தியின் உப தலைவர் பதவியை நான் கேட்கிறேன் என்று ஒரு கட்டத்திலும், அதன்பின்னர் கூட்டணிக்குள் நான் சூழ்ச்சி செய்கிறேன் என்றும் பிரச்சாரம் முன்னெடுக்கப்பட்டது. அது மட்டுமல்ல பிரதமர் வேட்பாளர் பதவியை கோருகின்றேன் என்றும் தகவல் பரப்பட்டது. ஒரு விடயத்தை நான் இங்கு தெளிவாகக் குறிப்பிட்டாக வேண்டும், பதவி, பட்டங்களுக்காக செயற்படும் அரசியல்வாதி நான் கிடையாது. எனது சுயமுயற்சியாலேயே அரசியலில் இந்த இடத்துக்கு வந்துள்ளேன். மாறாக எனது பெற்றோரை காண்பித்தோ அல்லது அரசியல்வாதிகளின் முதுகில் தொங்கியோ இங்கு வரவில்லை.

நாம் அரசியலுக்கு வந்து, இந்த நாட்டில் செய்யமுடியாமல் இருந்த பல அரசியல் மாற்றங்களை புரட்சியை ஏற்படுத்தியுள்ளோம். குறிப்பாக பிரபாகரனை தோற்கடித்தமை உள்ளிட்ட விடயமும் இதில் அடங்கும். எனவே, எதிர்காலத்திலும் நாம் அவ்வாறு செயற்படுவோம். அதிகாரம் தொடர்பில் எமக்கு கவலை [illegible] மக்கள் ஆசியுடன் [illegible] விருப்பத்துக்கமைய கிடைப்பதே அரசியல் வரம், பலமாகும். மக்களை சரியான திசையை நோக்கி அழைத்துச்செல்வதற்கான தலைமைத்துவத்தை நாம் வழங்குவோம். மக்களும் தற்போது மாற்றம் குறித்து சிந்தித்துள்ளனர். அரசுமீதான நம்பிக்கையும் இல்லாது போயுள்ளது.

தற்போதைய சூழ்நிலையில் ஆட்சிமாற்றத்துக்கான ஒத்துழைப்பை நான் வழங்கமாட்டேன். ஏனெனில் ஆட்சியைப் பொறுப்பேற்று, நாட்டை முன்னோக்கி கொண்டுசெல்லமுடியாத அளவுக்கு நாட்டின் நிலைமை தற்போது காணப்படுகின்றது. கட்சி தாவல்கள் ஊடாக ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்துவது பொருத்தமான நடவடிக்கையாக அமையாது. எனவே, மக்கள் மத்தியில் கருத்தொருமைப்பாட்டை கட்டியெழுப்ப வேண்டும் - என்றார். (எ-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னாரில் இதுவரை 656 பேருக்குத் தொற்று

மன்னார், ஜூன் 22



மன்னார் மாவட்டத்தில் இவ் வருடம் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் 639 பேர் கொவிட் தொற்றாளர்களாக இனம் காணப்பட்டுள்ளதுடன், நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கிடைக்கப்பெற்ற பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகளில் 12 பேர் தொற்றாளர்களாக இனம் காணப்பட்டுள்ளனர் என்று மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையினர் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் வெளியிட்ட அறிக்கையில் உள்ளதாவது:

ஞாயிற்றுக்கிழமை கிடைக்கப்பெற்ற விவரத்தின்படி மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையில் இருந்து 2 நபர்களும், ஆடைத் தொழிற்சாலை மற்றும் தலைமன்னார் பியர் சமூகத்திலிருந்து 10 பேரும் தொற்றாளர்களாக இனம் காணப்பட்டுள்ளனர்.

இதுவரைக்கும் மன்னார் மாவட்டத்தில் 656 தொற்றாளர்கள் இனம் காணப்பட்டுள்ளனர். இந்த வருடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட தொற்றாளர்களில் 512 நபர்கள் சமூகத்திலிருந்தும், 127 நபர்கள் மன்னார் பொது மருத்துவமனை மூலமும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர். இதுவரைக்கும் மன்னார் மாவட்டத்தில் கொவிட் தொற்று நோயால் நான்கு பேர் உயிரிழந்துள்ளனர். ஜூன் மாதம் மட்டும் 149 பேர் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர் - என்றுள்ளது. (ப-60)

# நடமாடும் வாகனசேவையில் ஈடுபடும் மூவருக்குத் தொற்று

சாவகச்சேரி, ஜூன் 22

சாவகச்சேரி சுகாதாரப் பகுதியினர் கடந்த வாரம் சாவகச்சேரி நகரப் பகுதியில் தேவைகள் அற்ற நிலையில் நடமாடியவர்களுக்கு நடத்திய எழுமாற்றுப் பி.சி.ஆர்.பரிசோதனையில் நடமாடும் வாகன சேவையில் ஈடுபடும் மூவருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

பயணத்தடை வேளையில் சாவகச்சேரி நகரப் பகுதியில் தேவைகள் அற்ற நிலையில் தினமும் பொது மக்கள் நடமாடுகின்றனர் என்று கிடைத்த தகவல்களையடுத்து, சுகாதாரப் பகுதியினரும் சாவகச்சேரி பொலிஸாரும் இணைந்து நகரப் பகுதியில் காணப்பட்ட 51 பேருக்கு பி.சி.ஆர்.பரிசோதனைகளை மேற்கொண்டனர். இவர்களில் நடமாடும் வியாபாரத்தில் ஈடுபடும் சாவகச்சேரியைச் சேர்ந்த ஒருவருக்கும் குருநாகலிலிருந்து பொருள்கள் விநியோகிக்கும் வாகனத்தில் வந்த சகோதரர்கள் இருவருக்கும் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

குருநாகல் பகுதியிலிருந்து வாகனத்தில் வந்தவர்கள், தமது ஊருக்குச் சென்றுள்ளதால், அவர்களுக்கு சிகிச்சை வழங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளுமாறு அப்பகுதி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்துக்கு சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தினர் அறிவித்துள்ளனர். (ப-9)

# 6 மாதங்களில் 5,000 பி.சி.ஆர்.

சாவகச்சேரி, ஜூன் 22

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தினரால் கடந்த ஆறு மாதங்களில் சுமார் 5 ஆயிரம் எழுமாற்றுப் பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று பணியக புள்ளிவிவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் நேற்று வரையான காலப் பகுதியில் பணியகத்திலும், தொற்றாளர்களுடன் நேரடித் தொடர்பாளர்களைத் தனிமைப்படுத்தி, அந்தந்தப் பிரிவுகளிலும் இந்த எழுமாறான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதன்படி நேற்றுவரை 4 ஆயிரத்து 929 பேருக்கு எழுமாற்று பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவர்களில் 335 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று அந்தப் புள்ளிவிவரத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப-9)

# 20 ஆயிரம் தடுப்பூசிகள் கிளிநொச்சிக்கு தேவை!

## மாவட்டச் செயலர் தெரிவிப்பு



**கிளிநொச்சி, ஜூன் 22**

**கிளிநொச்சி மாவட்டத்துக்கு 20 ஆயிரத்துக்கு மேற்பட்டோருக்குத் தடுப்பூசிகள் வழங்கப்பட வேண்டிய தேவை உள்ளது என கிளிநொச்சி மாவட்டச் செயலர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற கொவிட் தடுப்பூசி ஏற்றல் தொடர்பான விசேட கலந்துரையாடலைத் தொடர்ந்து இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிளிநொச்சி மாவட்டத்தில் 18 ஆயிரத்து 243 பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களுக்குத் தேவையான தடுப்பூசிகளை வழங்குவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதேவேளை கிளிநொச்சி மாவட்டத்தில் இயங்குகின்ற ஆடைத் தொழிற்சாலை ஊழியர்கள் மற்றும் ஏனைய தொழிற்சாலைகளில் பணிபுரிபவர்கள், அரச திணைக்களங்களில் கடமையாற்றும் களநிலை உத்தியோகத்தர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் என 20 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசி வழங்கவேண்டி உள்ளது. கிடைக்கின்ற தடுப்பூசிகளை முன்னுரிமை அடிப்படையில் பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கரைச்சி, கண்டாவளை, பச்சிலைப்பள்ளி மற்றும் பூநகரி ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகள் உள்ளிட்ட மாவட்ட மற்றும் பிரதேச மருத்துவமனைகள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர் அலுவலகம் ஆகியவற்றின் ஊடாக தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகளை முன்னெடுக்க உள்ளோம் - என்றார். (ப-113)





# இந்தியத் துணைத் தூதரகத்தால் சர்வதேச யோகாதின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஜூன், 22

யாழ். இந்தியத் துணைத் தூதரகம், ஏழாவது சர்வதேச யோகா தினத்தை 'யோகாவுடன் இருங்கள், வீட்டில் இருங்கள்' என்ற தொனிப்பொருளில் நேற்று முன்னெடுத்துள்ளது. இணைய வழியில் இந்த நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன.

நிகழ்வில் இந்தியத் துணைத் தூதுவர் பாலச்சந்திரன் தொடக்க உரை நிகழ்த்தியதுடன், விழாவுக்குத் தலைமை தாங்கினார். வடக்கு மாகாணசபையின் அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம் தலைமை விருந்தினராகக் கலந்துகொண்டார். விருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.வி.விக்னேஸ்வரன், சி.சிறிதரன் மற்றும் அங்கஜன் இராமநாதன் ஆகியோரும், யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் வி.மணிவண்ணன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் ச.சிறீசற்குணராஜா, வடக்கு மாகாணசபையின் முன்னாள் அமைச்சர்களான திருமதி அனந்தி சசிதரன் மற்றும் முனைவர் க.சர்வேஸ்வரன், வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் திரு.எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோரும் கலந்துகொண்டதுடன் அவர்களின் வாழ்த்துரைகளும் இடம்பெற்றன.

விழாவின் ஒரு பகுதியாக, யாழ் இந்தியத் துணைத் தூதரகமானது, வடக்கு மாகாணசபையின் கல்வி, கலாசார அலுவல்கள், விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சகத்துடன் இணைந்து வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களின் பாடசாலை மாணவர்களிடையே இணைய வழியில் யோகா வினாடி வினா நிகழ்ச்சியை நடத்தியது. அதில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களுக்கு பரிசில்களும் அறிவிக்கப்பட்டன.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் சுண்டிக்குளி பெண்கள் உயர்தரப் பாடசாலையைச் சேர்ந்த கு.கஜோரிகா, வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையைச் சேர்ந்த த.மயூரி, அதே பாடசாலையைச் சேர்ந்த மதுசஜி ஆகியோர் முதல் மூன்று இடங்களையும் பெற்றனர்.

வவுனியா மாவட்டத்தில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவர்களான ட.சோபனா, ட.தர்மிகன், ஏ.கவியகன் முறையே முதல் மூன்று இடங்களையும் பெற்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயத்தைச் சேர்ந்த து.சதுரங்க, கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவர்களான அபிநயன், அபிஷேக் ஆகியோர் முறையே முதல் மூன்று இடங்களையும் பெற்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கொக்குதொடுவாய் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த சதுர்சா, யோகபுரம் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த சுபேதா, ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த அபிஷனா ஆகியோர் முதல் முறையே முதல் மூன்று இடங்களையும் பெற்றனர்.

மன்னார் மாவட்டத்தில் அரிப்பு றோ.க.த.க. பாடசாலையைச் சேர்ந்த கிரிஸ் டார்வின், இலுப்பைக் கடவை மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த டுசாந்தி, கட்டையம்பன் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த லதுசிகா ஆகியோர் முறையே முதல் மூன்று இடங்களையும் பெற்றனர். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

CMYB

# தமிழர்களுக்கான தீர்வு விடயத்தில் செயலில் இறங்கவேண்டும் இந்தியா

## அரியநேத்திரன் எம்.பி தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஜூன் 22



முழு அதிகாரப்பரவலுக்கு இந்தியா இலங்கையை வலியுறுத்தினாலும், இலங்கை இந்தியாவின் வலியுறுத் தலை செவிசாய்ப்பதாகத் தெரியவில்லை. எனவே வாயால் அக்கறை காட்டுவதை விடுத்து, செயலில் அக்கறை காட்ட இந்தியா முன்வரவேண்டும் என மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

இந்தியாவில் யார் பிரதமராகத் தெரிவானாலும் தமிழ்த் தேசியத் தலைமைகள் அவர்களை நேரடியாகச் சந்தித்து வடகிழக்கு மக்களின் அரசியல் தீர்வு விடயங்களை பல தடவைகள் வலியுறுத்திய வரலாறுகள் இன்று நேற்றல்ல அமரர் இந்திராகாந்தி அம்மையார் இந்தியப் பிரதமராக இருந்த காலம் தொடக்கம் தற்போதய பிரதமர் நரேந்திர மோடி வரை தொடர்கின்றது.

அதன் அடிப்படையில்தான் அமரர் ராஜீவ் காந்தி பிரதமராக இருந்த காலப் பகுதியான 1987ஆம் ஆண்டில் இலங்கை - இந்திய ஒப்பந்தம் செய்யப்பட்டு இலங்கை ஜனாதிபதியாக இருந்த அமரர் ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் ஆட்சியில் 13ஆவது அரசமைப்புத் திருத்தத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றியதன் அடிப்படையில் மாகாணசபை முறை உருவாக்கப்பட்டது. அவ்வாறு உருவாக்கப்பட்ட மாகாணசபையின் அதிகாரங்கள் படிப்படியாகப் பிடுங்கப்பட்டு தற்போதய அரசின் காலத்தில் மாகாண நிர்வாகத்தின் கீழ் இருந்த மருத்துவமனைகள் மற்றும் பாடசாலைகள் மத்திய அரசின் கீழ் மாற்றப்பட்டுள்ளன. வடகிழக்கு மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான அரசியல் தீர்வு விடயத்தில் இலங்கைக்கு அழுத்தம் கொடுக்கும் வல்லமை பொருந்திய ஒரே நாடு இந்தியா மட்டுமே. இதனை இந்திய அரசு செய்ய வேண்டும் என்பதையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றது. இறுதியாக கடந்த வாரமும் இந்தியத் தூதுவருடன் கூட்டமைப்பு மேற்கொண்ட சந்திப்பிலும் மீண்டும் மீண்டும் அதனையே வலுயுறுத்தி எமது தலைவர்கள் பேசியுள்ளனர். எனவே இந்தியா இலங்கைத் தமிழர்களிடத்தில் தனக்கு இருக்கும் காத்திரமான பங்களிப்பை கருத்தில்கொண்டு செயற்பட வேண்டும் - என்றார். (ப)

# பனைமரக் குற்றிகளுடன் சந்தேகநபர் கைது

கொடிகாமம்,ஜூன் 22

அனுமதியின்றி பனை மரக் குற்றிகளை ஏற்றிச்சென்ற குற்றச்சாட்டில் ஒருவர் கொடிகாமம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் எழுதுமட்டுவாழ் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

சந்தேகநபரிடமிருந்து 13 பனைமரக் குற்றிகள் மீட்கப்பட்டன. விசாரணைகளை மேற்கொண்ட கொடிகாமம் பொலிஸார் சந்தேகநபரை பொலிஸ் பிணையில் விடுவித்தனர். (ஐ-159)



# இணைந்த சேவை அலுவலர்கள் கடமைகளை பொறுப்பேற்கவேண்டும்

## வடக்கு. பிரதிப் பிரதம செயலர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 22

வடமாகாண அரச அலுவலகங்களில் தற்காலிக இணைப்பு மற்றும் தற்காலிக இடமாற்றம் பெற்ற இணைந்த சேவையைச் சேர்ந்த அலுவலர்கள் உடனடியாகத் தமது சேவை நிலையத்தில் கடமைகளைப் பொறுப்பேற்குமாறு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் ம.பற்றிக் டிரஞ்சன் திணைக்களத் தலைவர்களுக்கு அறிவித்துள்ளார்.

கடந்த மே 12ஆம் திகதி மாகாண ஆளுநரின் தலைமையில் நடைபெற்ற அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் பிரதிப் பிரதம செயலாளர்கள் ஆகியோருடனான கலந்துரையாடலில், இணைந்த சேவைகளைச் சேர்ந்த அலுவலர்களின் தற்காலிக இணைப்பு மற்றும் தற்காலிக இடமாற்றம் ஆகியவை நியமன அதிகாரியான பிரதிப் பிரதம செயலாளரால் (நிர்வாகம்) மட்டுமே மேற்கொள்ளப்பட வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில், இனிவரும் காலங்களில் இணைந்த சேவையில் உள்ள அலுவலர்களின் தற்காலிக இணைப்பு மற்றும் தற்காலிக இடமாற்றம் என்பவற்றை மேற்கொள்ள வேண்டாம். அவ்வாறு தற்காலிக இணைப்பு மற்றும் தற்காலிக இடமாற்றம் வழங்கப்பட்டவர்களின் தற்காலிக இணைப்பு மற்றும் தற்காலிக இடமாற்றம் ஆகியவற்றை முடிவுறுத்த வேண்டும். இணைந்த சேவையிலுள்ள அலுவலர்களுக்கு தற்காலிக இணைப்பு மேற்கொள்ள வேண்டியிருப்பின் அவதானிப்பு மற்றும் சிபார்சுடன் அனுப்பி வைக்கவேண்டும் என்று அவர் அறிவித்துள்ளார். (ப-9)

# அதிகமான விலைக்கு பொருள்கள் விற்பனை

## பொதுமக்கள் சுட்டிக்காட்டு

மன்னார், ஜூன் 22

மன்னார் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட தலைமன்னார் பியர் மற்றும் ஸ்டேஷன் போன்ற இடங்களில் உள்ள வியாபார நிலையங்களில் அத்தியாவசிய பொருள்கள் அனைத்தும் அதிக விலைக்கு விற்கப்படுகின்றன என்று பொதுமக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்;

மன்னாரில் சீனி 1 கிலோ 118 ரூபாவுக்கு விற்கப்படும் அதேநேரம் தலைமன்னார் பகுதியில் 120 ரூபா தொடக்கம் 140 ரூபா வரையில் விற்கப்படுகின்றது. 114 ரூபாவுடைய அரிசி (வெள்ளை நாடு) தலைமன்னார் பகுதியில் 140 ரூபாவுக்கு விற்கப்படுகிறது. அனைத்து மரக்கறி வகைகளும் கால் (1/4) கிலோ 80 ரூபாவுக்கும் அதிகமாகவே விற்கப்பட்டு வருகின்றன. கொரோனா பயணத்தடை காரணமாக தொழில் வாய்ப்பை இழந்து அன்றாடம் உணவுக்கே கஷ்டப்பட்டு கொண்டிருக்கும் பொதுமக்களை மேலும்மேலும் துன்பப்படுத்தும் செயலை தலைமன்னார் பகுதி வியாபாரிகள் செய்து வருகின்றனர். எனவே அதிகாரிகள் மன்னார் நகரத்தை மட்டுமே பார்வையிடாமல் கிராமங்கள் தோறும் நடைபெறும் இவ்வாறான செயற்பாடுகளை அடையாளம் கண்டு அவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றனர். (ஐ-213)

# கசிப்பு உற்பத்தி: இளைஞன் கைது

வவுனியா,ஜூன் 22

கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் வவுனியா செட்டிக்குளம் பகுதியில் இருந்து இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வவுனியா, செட்டிக்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சின்னத்தம்பனை பகுதியில் கசிப்பு உற்பத்தி இடம்பெறுகிறது என பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது.

இதனையடுத்து நேற்று குறித்த பகுதியில் உள்ள வீடொன்று சுற்றிவளைக்கப்பட்டது. இதன்போது கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தும் மூன்று கோடா பெரல்கள் மற்றும் வயர்கள் என்பவை மீட்கப்பட்டன. சந்தேகத்தில் அப்பகுதியைச் சேர்ந்த 36 வயது இளைஞர் ஒருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

விசாரணைகளை மேற்கொண்ட செட்டிக்குளம் பொலிஸார், சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ-18)

# ஸ்ராலினின் ஒளிப்படத்தை ஏந்தி ஈழத்தமிழ் ஏதிலிகள் போராட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 22

திருச்சி மத்திய சிறை வளாகத்தில் உள்ள சிறப்பு முகாம் என்ற தனிச் சிறையில் ஆண்டுக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஈழத்தமிழர்கள், தங்களை தமிழக அரசு உடனடியாக விடுதலைசெய்ய வேண்டும் என வலியுறுத்தி நேற்று முன்தினம் 12ஆவது நாளாகவும் போராட்டத்தைத் தொடர்ந்தனர்.

இதுவரை எந்தத் தீர்வும் கிடைக்காத நிலையில் நேற்றுமுன்தினம் போராட்டத்தில் ஈடுபட்ட அவர்கள் தமிழக முதல்வரின் கவனத்தை ஈர்க்கும் வகையில், அவரின் ஒளிப்படத்தை தாங்கியவாறு போராட்டத்தை முன்னெடுத்தனர். (ம-19)



Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## விதைப்பதே அறுவடை!

நெல்லை விதைத்துவிட்டு தினையை அறுவடை செய்ய முடியுமா?. அல்லது தினையை விதைத்துவிட்டு நெற்கதிரைத்தான் அறுவடை செய்ய இயலுமா?. இவ்விரண்டும் எதிர் முரண்கள். இயலாத காரியங்கள். நாம் எதை விதைக்கின்றோமோ அது தான் அறுவடை. இதுதான் உலக நியதி. நெல்லை விதைத்துவிட்டு தினை கிடைக்கவில்லையே என்பதற்காக இன்னொருவரைக் குற்றம் சுமத்த முடியுமா?. இல்லவேயில்லை. விதைத்த நாம்தான் அதற்குப் பாத்திரவாளிகள். விதைப்பு ஒன்றாகவும் அறுவடை இன்னொன்றாகவும் இருக்க வாய்ப்பில்லை. இது தற்போது யாருக்குப் பொருந்துகின்றதோ இல்லையோ, வடக்கு மாகாணத்தில் உள்ள பெரும்பாலான மக்களுக்குக் கச்சிதப் பொருத்தம்

இலங்கை கொரோனாவால் சூழப்பட்ட தேசமாக மாறி பல வாரங்கள். நாடு மிக அபாயகரமான கட்டத்துக்குள் இருக்கின்றது என்று சுகாதாரத் துறையினரும், துறைசார் வல்லுநர்களும் தொடர்ச்சியாக எச்சரிக்கை விடுத்து வருகின்றனர். 'போதாத குறைக்குப் பொந்தனும் வந்தான்' என்ற கணக்கில் தற்போது டெல்டாவும் இலங்கையில் பரவத் தலைப்பட்டுள்ளது. இத்தகையதொரு பின்னணியில் கொரோனாவைக் கட்டுப்படுத்துவதற்காக கடந்த ஒரு மாத காலமாக விதிக்கப்பட்டிருந்த பயணத் தடைகள் நேற்று விலக்கப்பட்டன. 'மக்களின் பாதுகாப்புக்கு மக்களே பொறுப்பு' என்ற கைவிரி நிலையில்தான் இந்தப் பயணத்தடைகள் நீக்கப் பட்டன. ஆனால், மக்கள் நடந்துகொண்டதென்னமோ அலங்கோலமாகத்தான்.

பயணத்தடை விலக்கு நேற்றுடன் முடிந்துவிடும் விடயமல்ல. இன்றும் நாடாளாவிய ரீதியில் பயணத் தடைக்கு விலக்கு வழங்கப்பட்டுள்ளதுதான். அத்துடன் நீடித்த - முழுமையான விலக்கும் கூடிய விரைவில் வழங்கப்படவுள்ளது. இவ்வாறிருக்கையில் ஏதோ ஓரிரு மணிநேரத்தில் பயணத்தடை விலக்கு முடிவுக்கு வந்து மீண்டும் மாதக் கணக்கில் நாடு முடங்கப்போவதைப் போன்று மக்களின் செயற்பாடுகள் அமைந்திருந்தன. கொரோனாப் பெருந்தொற்றுக்கு உரிய விழிப்புணர்வையோ, சமூக இடைவெளியையோ பெரும்பாலான இடங்களில் அவதானிக்க முடியவில்லை. உண்மையில் பெரும் அதிருப்தியும் கவலையும் தரும் விடயம் இது.

கிட்டத்தட்ட 30 நாள்கள் நீண்ட முடக்கத்தை (பயணத்தடை) மக்கள் சந்தித்துள்ளனர். எனவே மக்களுக்கு இருக்கக்கூடிய தேவைகளைப் புரிந்துகொள்ள முடிகின்றது. அதேநேரம் இயல்பான - தார்மீக புரிந்துணர்வின் அடிப்படையில் அனைவரும் செயற்பட்டிருக்க வேண்டும். பொழுது புலர்ந்ததும் முதல் வேலையாக வீதிகளில் இறங்கியிருக்கத் தேவையில்லை என்பதே கருத்து.

'மடை திறந்த வெள்ளம்போல்' நேற்றுப் பல இடங்களில் கூடிய இந்த மக்கள் அலை, தனித்தனியாக சிறு கொத்தணிகளை ஆங்காங்கே ஏற்படுத்திவிடக்கூடிய சக்தி கொண்டது. இத்தகைய கொத்தணிகள்தான் எம்மை இதுகாலும் பயணத்தடைக்குள்ளும் பயண வரையறைகளுக்குள்ளும் முடக்கிப் போட்டிருந்தன. ஆக, கசப்பான ஓர் அனுபவத்தை கண்முன் கண்ட பின்னரும் மீண்டும் அதுபோன்றதொரு பயணத் தடைக்கோ பொது முடக்கத்துக்கோ உரிய ஏதுநிலைகளை ஏற்படுத்துவதை என்னவென்று சொல்வது. இதற்கு அரசின் மீதோ அல்லது சுகாதாரத் தரப்பின் மீதோ குற்றத்தைச் சுமத்திவிட்டு ஓடியொளிந்துவிட முடியாது. ஏனெனில், விதைப்பவர்கள் நாங்கள். விதைப்பது வேண்டத்தகாத விடயங்களை. ஆதலால் அறுவடையும் அத்தகைய விடயமாகத்தான் இருக்கும். அதற்குப் பாத்திரவாளிகளும் நாமே.



# நுண்நிதிக் கடன்களை தற்போது அறவிடாதீர்

## துணுக்காய் சபை உறுப்பினர் கோரிக்கை

கிளிநொச்சி, ஜூன் 22

நுண்நிதிக் கடன்களை பயணத்தடைக் காலங்களில் அறவீடு செய்வதற்கு நாள் தோறும் செல்லும் உத்தியோகத்தர்களால், பல குடும்பங்கள் சிரமங்களை எதிர்கொண்டுள்ளன என்று துணுக்காய் பிரதேச சபையின் உறுப்பினர் ச.சுயன்சன் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்;

வருமானங்கள் இன்றி வீடுகளில் உள்ள குடும்பங்களிடம் பயணத்தடைக் காலங்களிலும் சாதாரண காலத்தில் வழங்கப்பட்ட கடன் தொகையை அறவிட நிதி நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் அடிக்கடி செல்கின்றனர். இதனால் கடன்களைச் செலுத்த முடியாத நிலையில் பல குடும்பங்கள் மன உளைச்சல்களை எதிர்கொண்டுள்ளன. நுண்நிதிக் கடன் சுமையால் கடந்த காலங்களில் பல குடும்பங்களைச் சேர்ந்த நபர்கள் தவறான முடிவு எடுத்த சம்பவங்கள் பதிவாகியுள்ள நிலையில், நுண் கடன்களை வழங்கிய நிறுவனங்கள் பயணத்தடைக் காலத்தில் கடன்களை அறவிடாது கால அவகாசம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். இதற்கான உத்தரவாதங்களை உயர் அதிகாரிகள் வழங்க வேண்டும். நுண் நிதிக் கடன்களை அறவிடுவதற்கு கொவிட் 19 முடக்க காலத்தில் நுண்நிதிக் கடன் நிறுவனங்கள் முயலுமானால் பல குடும்பங்கள் நெருக்கடிகளுக்குள் தவறான முடிவுகளுக்கு செல்வதற்கான வாய்ப்புகள் ஏற்படும் - என்றார்.

(ப-13)

புதுக்குடியிருப்பில்

# அரச காணி அபகரிப்பு; பொலிஸில் முறைப்பாடு

## கிராம அலுவலர் துரித நடவடிக்கை



முல்லைத்தீவு, ஜூன் 22

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு கோம்பாவில் திம்பிலி பகுதியில் அரச காணிகள் தனிநபர்களால் அபகரிக்கப்பட்டுள்ள சம்பவம் குறித்து புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் கோம்பாவில் கிராம அலுவலரால் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது.

நாட்டில் பயணத்தடை விதிக்கப்பட்டுள்ள காலத்தில் புதுக்குடியிருப்பு கோம்பாவில் கிராமத்தில் உள்ள திம்பிலி குளம் மற்றும் அதனை அண்டிய காட்டுப் பகுதிகளில் தனி நபர்களால் கனரக இயந்திரம் கொண்டு காடு அழிக்கப்பட்டு காணி பிடிக்கப்பட்டுள்ளதுடன் காடுகளில் நின்ற பெறுமதியான மரங்களும் அழிக்கப்பட்டுள்ளன. அத்துடன் குளத்தில் சட்டவிரோதமான முறையில் மணலும் அகழப்பட்டுள்ளது. சம்பவத்தை நேரடியாகச் சென்று அவதானித்த கிராம அலுவலர், சம்பவம் தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் நேற்றுமுன்தினம் முறைப்பாட்டைப் பதிவு செய்தார்.

(ம-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# டெங்கை கட்டுப்படுத்த அனைவரும் முன்வரவும்

## சுகாதாரப் பிரிவினர் அறிவிப்பு

சாவகச்சேரி, ஜூன் 22

தென்மராட்சி பிரதேசத்தில், மீண்டும் டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டு வருவதால் டெங்கை முழுமையாக கட்டுப்படுத்துவதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்று சாவகச்சேரி சுகாதாரப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த வாரம் கைதடி மற்றும் எழுதுமட்டுவாழ் பிரிவுகளில் டெங்கு நோயாளிகள் அடையாளம் காணப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

பிரதேசத்தில் அண்மைக் காலமாக இடையிடையே பெருமழை பெய்து வருவதால் குடியிருப்புகள் மற்றும் காணிகளில் வீசப்பட்டு காணப்படும் நீர் ஏந்து பொருள்களில் டெங்கு நுளம்பு உற்பத்தியாகக்கூடிய வாய்ப்புகள் காணப்படுகின்றன.

சுகாதார திணைக்கள. டெங்கு உதவியாளர்கள் வீடு வீடாகச் சென்று பரிசோதனைகளை ஆரம்பித்துள்ளதால் மக்கள் தமது குடியிருப்புகள் மற்றும் காணிகள் போன்றவற்றில் பாவனைக்கு உதவாத நிலையில் வீசப்பட்டுள்ள நீர் ஏந்து பொருள்களை அப்புறப்படுத்தவும் - என்றனர். (ஐ-9)

# விலை அதிகரிக்காவிடில் பால்மாவுக்கு தட்டுப்பாடு?

## இறக்குமதி நிறுவனங்கள் எச்சரிக்கை



**கொழும்பு, ஜூன் 22**

**இறக்குமதி செய்யப்படும் பால்மாக்களின் விலையை அதிகரிக்காவிட்டால், சந்தைகளில் பால்மாவுக்குத் தட்டுப்பாடு ஏற்படும் என்று அவற்றை இறக்குமதி செய்யும் நிறுவனங்களின் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.**

உலக சந்தையில் பால்மாவின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. எனவே உள்நாட்டிலும் ஒரு கிலோ பால்மாவின் விலையை 350 ரூபாவாலும், 400 கிராம் பால்மாவின் விலையை 140 ரூபாவாலும் அதிகரிக்க வேண்டும் என்று நுகர்வோர் அதிகார சபையிடம், இறக்குமதி நிறுவனங்களின் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

அத்துடன் சில நிறுவனங்கள் புதிதாக பால்மாக்களை இறக்குமதி செய்வதை முற்றிலும் நிறுத்தியுள்ளன. சில நிறுவனங்கள் பால்மா இறக்குமதியை 30 வீதத்தால் குறைத்துள்ளன.

இந்த நிலையில் பால்மா விலைகளை அதிகரிக்குமாறு நுகர்வோர் அதிகார சபையிடம் விடுக்கப்பட்டுள்ள கோரிக்கைக்கு உரிய பதில் கிடைக்கவில்லை என்றால், நாட்டில் பால்மா தட்டுப்பாடு ஏற்படும் என்று பால்மாவை இறக்குமதி செய்யும் நிறுவனங்களின் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது. (எ-4)



சேதனப்பசளை பயன்பாடு தொடர்பாக சமுர்த்திப் பயனாளிகளுக்கான கலந்துரையாடல் தென்மராட்சி பிரதேச செயலக மண்டபத்தில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்றது. தெரிவு செய்யப்பட்ட ஒருசில சமுர்த்தி பயனாளிகள் இக் கலந்துரையாடலில் பங்குபற்றினர். (ஐ-9)

# விபத்தில் பெண் படுகாயம்

கொடிகாமம், ஜூன் 22

வீதியைக் கடக்க முயன்ற பெண் மோட்டார் சைக்கிள் மோதியதில் படுகாயமடைந்தார். இந்தச் சம்பவம் நேற்று முற்பகல் கொடிகாமம் சந்தியில் நடந்துள்ளது.

கொடிகாமம், தவசிகுளத்தைச் சேர்ந்த கமலேஸ்வரன் பரிமளா (வயது-44) என்ற பெண்ணே காயமடைந்தார். அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.

விபத்துத் தொடர்பான விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (எ-159)



# கொரோனாத் தொற்றாளர்கள்: தகவல்களில் உண்மையில்லை

## சந்தேகம் வெளியிட்டது மருத்துவ அதிகாரிகள் சங்கம்

கொழும்பு, ஜூன் 22

இலங்கையில் கொரோனாத் தொற்றாளர்கள் தொடர்பில் வெளியிடப்படும் தகவல்களில் நம்பிக்கையில்லை. எனவே செயற்றிறனுடைய அதிகாரிகளை நியமித்து சரியான தகவல்களை வெளியிட வேண்டும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் சங்கத்தின் உதவிச் செயலாளர் மருத்துவர் நவின் டி சொய்சா தெரிவிக்கையில்,

கொரோனா தொடர்பில் தொற்றுநோயியல் ஆய்வுப் பிரிவு தற்போது சமர்ப்பிக்கும் தரவுகள் சரியான தரவுகள் அல்ல. கண்டுபிடிக்கப்படும் தொற்றாளர்கள் மற்றும் இறப்பு எண்ணிக்கை தொடர்பில் பிழையான தரவுகளே சமர்ப்பிக்கப்படுகின்றன.

அதனால் தொற்றுநோயியல் ஆய்வுப் பிரிவு பிரதானி உட்பட அதன் முன்னணியில் இருப்பவர்களை நீக்கிவிட்டு, செயற்றினுடைய அதிகாரிகளை நியமிக்க வேண்டும்.

நாட்டில் தொற்று நிலைமை தொடர்பில் சரியான தரவுகள் நாட்டு மக்களுக்குத் தெரியாத நிலைமையிலேயே பயணக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டுள்ளன.

சரியான தரவுகள் இல்லாமல் பயணக் கட்டுப்பாடு தளர்த்தப்படுவதால் எவ்வாறான நிலை தோன்றும் என்பதை எங்களால் சொல்ல முடியாது - என்றார். (எ-4)



# பாடசாலைகளை ஆரம்பிப்பதற்கு மருத்துவர்களின் அறிக்கை தயார்

## ஜனாதிபதியுடன் விரைவில் கலந்துரையாடல்

கொழும்பு, ஜூன் 22

பாடசாலைகள் மற்றும் முன்பள்ளிகள் ஆகியவற்றை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பில், ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட மருத்துவ நிபுணர்களின் அறிக்கை கிடைக்கப்பெற்றுள்ளது என்று கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாடசாலைகள் ஆரம்பிக்கப்படுவதற்கு சுமார் நான்கு வாரங்களுக்கு முன்னர், மாணவர்களுக்கு குறைந்தபட்சம் ஒரு டோஸ் தடுப்பூசியையாவது செலுத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பாடசாலைகளை மீண்டும் திறப்பது தொடர்பாக மூன்று சுற்று விவாதங்கள் நடத்தப்பட்டுள்ளன. தேவையான ஆலோசனைகளை வழங்குவதற்கு ஒரு மருத்துவ குழு முன்வந்து செயற்பட்டது.

அந்த வகையில் குறித்த மருத்துவ நிபுணர்கள் குழு தயாரித்த அறிக்கை கல்வி அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதனை ஜனாதிபதியிடம் சமர்ப்பித்து தீர்மானம் எடுக்கப்படும் - என்றார். (எ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சஜித் பிரமேதாஸவே எதிர்க்கட்சித் தலைவர்

## பதவி மாறாது என்கிறார் ராஜித



கொழும்பு, ஜூன் 22
எதிர்க்கட்சித் தலைவராக சஜித் பிரேமதாஸவே தொடர்ந்தும் செயற்படுவார். அவரை எதிர்க்கட்சித் தலைவர் பதவியிலிருந்து நீக்கும் நிலைப்பாட்டில் ஐக்கிய மக்கள் சக்தியில் எவரும் இல்லை. எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் மாற்றம் ஏற்படாது.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றுக்கு வருவதால், எந்தவிதமான பிரச்சினைகளும் எமக்கு இல்லை. எதிர்க் கட்சிகளுடன் இணைந்து அரசை வெளியேற்ற ரணில் ஒத்துழைக்க வேண்டும்.

ரணிலுடன் ஐக்கிய மக்கள் சக்தியின் 16 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இணைவார்கள் என்று தெரிவிக்கப்படுவதில் எந்தவிதமான உண்மைகளும் இல்லை. ரணிலுடன் இருக்கும் 'டீல்' காரர்களே இவ்வாறான பொய்களைக் கூறி வருகின்றனர்.

ரணிலுடன் இருப்பவர்கள், அரசியல் என்றால் 'டீல்' செய்வதென்று நினைத்துக்கொண்டு இருக்கிறார்கள். ரணிலின் தற்போதைய நிலைக்கு இந்த 'டீல்' காரர்களே காரணம். இதனை ரணில் புரிந்துகொள்ள வேண்டும் - என்றார். (எ-4)

# கடிதங்கள் விநியோகம் ஆரம்பம்

கொழும்பு, ஜூன் 22
நாடளாவிய ரீதியில் அனைத்து தபால் சேவைகளும் நேற்று வழமைக்குத் திரும்பியுள்ள நிலையில், குவிந்த கடிதங்களின் விநியோகமும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று உதவி தபால்மா அதிபர் ராஜித ரணசிங்க தெரிவித்தார்.

சிறப்பு அரசு வர்த்தமானி அறிவிப்பால் அத்தியாவசிய சேவைகளாக அறிவிக்கப்பட்ட நிறுவனங்கள் மற்றும் சேவைகளில் தபால் சேவையும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில், பயணக் கட்டுப்பாடுகளால் கிட்டத்தட்ட ஒரு மில்லியன் கடிதங்கள் நாடு முழுவதும் தேங்கியிருந்தன. அவற்றை விநியோகிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-4)

# சஜித்தால் ஏமாற்றப்பட்டவர்கள் மீண்டும் ஐ.தே.கவில் இணைவர்

## ஐ.தே.க. நம்பிக்கை



**கொழும்பு, ஜூன் 22**
**ஐ.தே.க.விலிருந்து சஜித் பிரேமதாஸவின் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்துகொண்ட, 16 உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், மீண்டும் எம்முடன் இணைந்துள்ளனர். இதேபோன்று ஏனையோரும் எங்களுடன் இணைவதற்கு ஆர்வமாகவுள்ளனர் என்று ஐ.தே.கவின் பொதுச்செயலாளர் பாலித்த ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கட்சியொன்றை ஆரம்பிப்பதற்கு, ஐ.தே.க.வின் மத்திய செயற்குழு அனுமதி வழங்கியுள்ளது என்று கூறியே சஜித், ஐக்கிய மக்கள் சக்தியை உருவாக்கியுள்ளார். ஐ.தே.க.வின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் இது போன்ற எந்தவிதமான தீர்மானங்களும் எடுக்கப்படவில்லை.

பலர் தங்களை சஜித் ஏமாற்றிவிட்டார் என்கின்றனர். அவ்வாறு ஏமாற்றப்பட்ட பல உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் மீண்டும் ஐ.தே.க.வில் இணைந்து கொள்வர். அத்துடன் சிறிலங்கா பொதுஜன பெரமுனவைச் சேர்ந்த பலரும், ஐ.தே.கவுக்கு ஆதரவளிக்கும் நிலைப்பாட்டில் உள்ளனர். கட்சியின் தீர்மானத்துக்கு அமைவாக, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நாளை நாடாளுமன்ற உறுப்பினராக சத்தியப் பிரமாணம் செய்து கொள்வார் - என்றார். (எ-4)

# சுதத் விவகாரத்தில் பவித்ரா மௌனம்

கொழும்பு, ஜூன் 22
தொற்றுநோயியல் பிரிவின் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் சுதத் சமரவீரவின் இடமாற்றம் தொடர்பில், சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி பதில் எதுவும் தெரிவிக்காமல் மௌனமாகவுள்ளார்.

மருத்துவர் சுதத் சமரவீர நீண்ட காலமாக கொவிட் தொற்றுக்கள் மற்றும் உயிரிழப்புக்கள் தெடர்பான துல்லியமான தரவுகளை வழங்கத் தவறியுள்ளார் என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது.

இத்தகைய சூழ்நிலையில், இந்த விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர், அவருக்கு வழங்கப்பட்ட இடமாற்றம் தொடர்பில் எதுவும் கூறாது இருப்பது தொடர்பில் பலர் விசனம் தெரிவித்துள்ளனர். (எ-4)

# ரணிலின் பின்னால் இனியும் ஓடோம்!

## அவர் காய்ந்த மரமென்கிறார் பொன்சேகா



வேண்டாமென்று ஒதுக்கியவருக்குப் பின்னால் மீண்டும் ஓடும் அளவுக்கு எம்மில் எவருக்கும் பைத்தியம் பிடிக்கவில்லை. ரணில் விக்கிரமசிங்க, ஒரு காய்ந்த மரம் போன்றவர். அவர் காணாமல் போன அரசியல்வாதி என்ற நினைப்பே எம்மிடம் உள்ளது. இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது கட்சியிலிருந்து 60 பேர், ரணிலுடன் சென்று விடுவர் என்கின்றனர். எம்மிடம் 45 உறுப்பினர்கள் மட்டுமே இருக்கின்றனர். ஒருவர் பின்னால் ஓடும் அளவுக்கு எமது உறுப்பினர்களின் நிலை மாறிவிடவில்லை.

இதேவேளை, நாட்டின் தற்போதைய நிலையில், அரசு எடுக்கும் தீர்மானங்கள் போதுமானவையாக இல்லை. அவை பிழையான தீர்மானங்களாகும்.

அதனால் தான் சர்வகட்சி மாநாட்டை நடத்த வேண்டும் என்று நாம் நினைக்கின்றோம். இவ்வாறான நேரத்தில் தான் அரசு நாட்டிலுள்ள சகல கட்சிகளுடனும் கலந்துரையாடி, அவர்களது அபிப்பிராயங்களையும் செவிமடுத்துச் செயற்பட வேண்டும். இந்த அரசு அதனைச் செய்யத் தயாரில்லை என்ற நிலையில், எதிர்க்கட்சித் தலைவர் சர்வகட்சி மாநாடு தொடர்பில் மீண்டும் நினைவுபடுத்தியுள்ளார் - என்றார். (எ-4)

# குழப்பம் முடிவுக்கு வரும் கூட்டணி அரசு தொடரும்

## சபை முதல்வர் தினேஷ் தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 22
கூட்டணி அரசு என்றால் குழப்பம் இருக்கவே செய்யும். எனவே, பிரச்சினைகளை பேசித் தீர்த்து முன்னோக்கி பயணிப்பதே அரசின் எதிர்ப்பார்ப்பாகும்

இவ்வாறு சபை முதல்வரும், அமைச்சருமான தினேஷ் குணவர்தன நேற்று தெரிவித்தார்.

பொதுஜன பெரமுன தலைமையிலான மொட்டு கூட்டணிக்குள் ஏற்பட்டுள்ள முறுகல் நிலை தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

ஒவ்வொரு கட்சிக்கும் வெவ்வேறான கருத்துகள், நிலைப்பாடுகள் இருக்கக் கூடும். இவை இணைந்து கூட்டணி அமைக்கும் போதும் மாறுபட்ட கருத்துகள் முன்வைக்கப்படலாம். எனவே, பிரச்சினைகள் இருப்பின் அவை தொடர்பாகப் பேசித் தீர்த்து கூட்டணி அரசாக முன்னோக்கி பயணிப்போம்.

தற்போதைய சூழ்நிலையில் உலக பொருளாதாரத்துக்கு பெரும் சவால் ஏற்பட்டுள்ளது. தேசிய பொருளாதாரத்திலும் அது தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. எனவே, சட்ட திட்டம், கொள்கைத் திட்டம் மற்றும் வேலைத்திட்டங்களில் மாற்றங்களை ஏற்படுத்துவது குறித்தும் கவனம் செலுத்த வேண்டியுள்ளது - என்றார். (எ-44)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org





## 25 குடும்பங்களுக்கு உணவுப்பொதிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 22

வலி.கிழக்கு ஆனந்தபுரம் கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த 25 பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு உலர் உணவுப்பொதிகள் வழங்கப்பட்டன.

பீதாம்பரம் அறக்கட்டளை நிதியமும் காங்கேசன் துறை கோல்டன் ஸ்டார் லயன்ஸ் கழகமும் இணைந்து இந்த உதவியை அண்மையில் வழங்கின. (ஐ-9)



## 27 குடும்பங்களுக்கு உதவிப்பொருள்கள்

முல்லைத்தீவு,ஜூன் 22

வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் துரை ராசா ரவிகரனால் முன்னெடுக்கப்படும் 'வாழ்வோம் வளம்பெறுவோம்' செயற்றிட்டத்தின் 44 ஆம் கட்டம் துணுக்காய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட தேறாங் கண்டல் பகுதியில் கடந்த சனிக்கிழமை நடைபெற் றது.

தேறாங்கண்டல் பகுதியைச் சேர்ந்த 27 குடும்பங்கள் இந்தச் செயற்றிட்டத்தில் உள்ளீர்க்கப்பட்டு உதவிப் பொருள்கள் வழங்கப்பட்டன.

இதற்கான நிதி உதவியை அமெரிக்காவின் புளோ றிடா மாநிலத்தைச் சேர்ந்த கென் என்பவர் வழங்கி யிருந்தார். (ஐ-246)

பயணத்தடை காரணமாக பாதிக்கப்பட்ட கிளிநொச்சி இராமநாதபுரம் அழகாபுரி கிராமத்தைச் சேர்ந்த 20 குடும்பங்களுக்கு உணவுப்பொதிகள் வழங்கப்பட்டன. இவ் உணவுப்பொதிகள் கிளிநொச்சி லயன்ஸ் கழகத் தால் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டன. (ஐ-13)



## முல்லை மக்களுக்கு உணவுப்பொருள்கள்

முல்லைத்தீவு,ஜூன் 22

முல்லைத்தீவு மாவட்டத்தின் சிலாவத்தை மற்றும் தீர்த்தக்கரை பகுதிகளில் உள்ள 25 குடும்பங்களுக்கு உலர் உணவுப்பொருள்கள் வழங்கப்பட்டன.

'உறவுகளுக்குக் கரம் கொடுப்போம்' என்ற அமைப் பின் ஊடாக இந்தப் பொருள்கள் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டன.

வடக்கு மாகாண முன்னாள் விவசாய அமைச்சர் க.சிவனேசன், கரைதுறைப்பற்று பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் க.தவராசா, கரைதுறைப் பற்று பிரதேச சபையின் உறுப்பினர் இ.கவாஸ்கர், உறவுகளுக்குக் கரம் கொடுப்போம் அமைப்பின் இலங்கைக்கான இணைப்பாளர் எஸ்.மாதவன் மற் றும் சமூக ஆர்வலர் யூட்சன் ஆகியோர் இணைந்து பயனாளிகளிடம் பொருள்களை கையளித்தனர். (ஐ-13)





## 90 குடும்பங்களுக்கு உணவுப்பொதிகள்

வடமராட்சி,ஜூன் 22

பயணத்தடை காரணமாக பாதிக்கப்பட்ட யாழ்ப்பா ணம் வடமராட்சி கிழக்கு உடுத்துறை கிராமத்தைச் சேர்ந்த 90 பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு உலர் உணவுப்பொதிகள் வழங்கப்பட்டன.

ஆஸ்திரேலியாவில் வசிக்கும் ரவிகோணேஸ்வரன் மஞ்சுளா தம்பதிகளின் 30 ஆவது திருமண நாளை முன்னிட்டு இந்த உதவிகள் வழங்கப்பட்டன. (ஐ-19)






## 35 குடும்பங்களுக்கு உணவுப்பொதிகள்

கிளிநொச்சி,ஜூன் 22

கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி பச் சிலைப்பள்ளி பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட 35 குடும்பங்களுக்கு உலர் உணவுப்பொதிகள் வழங்கப் பட்டன.

வடக்கு மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் சஞ்சீவ தர் மரட்ண நேற்றுமுன்தினம் கிளிநொச்சி பளை பொலிஸ் நிலையத்துக்கு பயணம் மேற்கொண்டிருந்தார்.

இதன்போது வடக்கு மாகாண மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபரின் பணிப்புரைக்கு அமைவாக கிளிநொச்சி பளை பொலிஸ் நிலைய அதிகாரியின் ஏற்பாட்டில் இந்த உதவி கள் வழங்கப்பட்டன. (ஐ-214)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனாவுக்கான மருந்தை விளம்பரப்படுத்த இடமில்லை

## ஆணைய அனுமதி அவசியம்



கொழும்பு, ஜுன் 22

கொரோனாவுக்கு மருந்து கண்டுபிடித்துள்ளோம் என்று தெரிவிக்கும் மருத்துவர்கள், அதற்கான அனுமதியை தேசிய மருந்து ஒழுங்குமுறை ஆணையத்திடமிருந்து பெற்றுக்கொள்வது அவசியம். அவ்வாறு அனுமதி கிடைத்த பின்னரே குறித்த மருந்தை விளம்பரப்படுத்த முடியும் என்று இலங்கை மருத்துவ சபையின் தலைவர் பேராசிரியர் வஜிர திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த நடைமுறையைப் பின்பற்றாத மருத்துவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கொரோனா மருந்துகளைக் கண்டுபிடித்துள்ளோம் என்று விளம்பரம்செய்யும் மருத்துவர்கள் தொடர்பில் பொதுமக்கள் முறைப்பாடளிக்க முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஏ-4)

# பங்காளியாக இருந்தாலும் அனைத்தையும் ஏற்கோம்!

## திஸ்ஸ விதாரன தெரிவிப்பு



கொழும்பு, ஜுன் 22

**அரசின் பங்காளிகளாக இருந்தாலும், அவர்கள் எடுக்கும் அனைத்துத் தீர்மானங்களையும் ஏற்றுக்கொள்ள முடியாது என்று நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ விதாரன தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், எரிபொருள்களின் விலை அதிகரிப்புத் தொடர்பில் எடுக்கப்பட்ட தீர்மானம், அரசின் தீர்மானம். அதில் பிரதமர் மஹிந்த ராஜபக்ச கையெழுத்திட்டுள்ளார்.

ஆளுங்கட்சியான சிறிலங்கா பொதுஜன பெரமுனவில் இருந்தே அதிகளவானோர் நாடாளுமன்றுக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர் என்பது உண்மை. ஆனால் அரசுக்குள் உள்ள ஏனைய கட்சிகளுக்கும் கௌரவமளிக்க வேண்டும்.

அரசின் பங்காளிக் கட்சியாக நாம் இருந்தாலும், அரசு எடுக்கும் அனைத்துத் தீர்மானங்களுக்கும் உடன்படப்போவதில்லை. உதய கம்மன்பிலவுக்கு எதிரான சாகர காரியவத்தின் அறிக்கை, அரச கூட்டணிக் கட்சிக் கொள்கைகளுக்கு எதிரானது - என்றார். (ஏ-4)

# அரசை பலப்படுத்துவதற்கே நம்பிக்கையில்லா தீர்மானம்

## பெருமைகொள்கிறார் செஹான் சேமசிங்க

கொழும்பு, ஜுன் 22

வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை அரசு, சிறந்த முறையில் வெற்றிகொள்ளும். இந்தப் பிரேரணை ஊடாக அரசு பலமடையுமே தவிர, பலவீனமடையாது இவ்வாறு சமுர்த்தி, நுண்நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எரிபொருள் விலையேற்றத்தைக் கொண்டு எதிர்த்தரப்பினர் அரசியல் இலாபம் தேடிக்கொள்ள முயற்சிக்கின்றனர். அடிப்படைக் காரணிகள் ஏதுமின்றி வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வரவுள்ளனர். இதனை சிறந்த முறையில் வெற்றிகொள்வோம்.

கொவிட்-19 வைரஸ் தாக்கத்தைக் கட்டுப்படுத்தும் திட்டங்கள் சிறந்த முறையில் முன்னெடுக்கப்பட்டுள்ளன. ஒரு சில குறைபாடுகள் காணப்படுகின்றன. அவை திருத்தப்பட்டுள்ளன. பயணக் கட்டுப்பாடுகளே தளர்த்தப்பட்டுள்ளன. சுகாதாரப் பாதுகாப்பு அறிவுறுத்தல்கள் தளர்த்தப்படவில்லை. அவை கடுமையாக்கப்படும்.

கொவிட்-19 வைரஸ் தாக்கத்தைக் கட்டுப்படுத்தும் அரசின் செயற்றிட்டங்களுக்கு, மக்கள் முழுமையான ஒத்துழைப்பு வழங்க வேண்டும்- என்றார். (ஏ-4)

# தவறான அறிக்கையாலேயே சுதத் சமரவீர இடமாற்றம்

## இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு, ஜுன் 22

கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை தொடர்பில், தவறான அறிக்கை வெளியிடப்பட்டதாலேயே, தொற்றுநோய்ப் பிரிவின் பிரதானி சுதத் சமரவீர இடமாற்றப்பட்டார் என்று சுகாதார இராஜாங்க அமைச்சர் சுதர்சினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

101 இறப்புக்கள் ஒரே நாளில் பதிவாகின என்று தெரிவிக்கப்படும் விடயத்தை ஆராய்ந்தபோது, ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் பதிவான இறப்புக்களையும் சேர்த்து ஒரே நாளில் அறிக்கை வெளியிடப்பட்டிருந்தது.

இந்த அறிக்கையை அடிப்படையாக வைத்தே அரசும், சுகாதாரத்தரப்பும் சில தீர்மானங்களை எடுக்கின்றன. எனவே, சரியான தகவல்களை வழங்கும் பொறுப்பிலிருந்து விலகியமை பெரும் குற்றமாகும். இது சதியா அல்லது விதியா என்று கூறமுடியாது. ஏனெனில் நாட்டை தவறாக வழிநடத்தும் செயற்பாடுகளை அனுமதிக்க முடியாது - என்றார். (ஏ-4)

# 8,000 பொலிஸார் களமிறக்கம்

கொழும்பு, ஜுன் 22

நாடளாவிய ரீதியில் பயணக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ள நிலையில், மேல் மாகாணத்தில் 700 அவசர வீதித் தடைகளை நிறுவுவதற்கும், சுமார் 8 ஆயிரம் பொலிஸாரைக் கண்காணிப்புப் பணியில் ஈடுபடுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

அதேவேளை சுகாதார விதிமுறைகளுக்கு இணங்க நிறுவனங்கள் செயற்படுகின்றனவா என்பதைக் கண்டறிய, கொழும்பு மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் ட்ரோன் மூலமான கண்காணிப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஏ-4)

# பிழையான தரவுகள் தொடர்பில் விசாரணை

## இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு, ஜுன் 22

கொரோனாத் தொற்றுத் தொடர்பில், பிழையான தரவுகளை வழங்கியவர் மீது ஒழுக்காற்று விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என்று ஔடதங்கள் தயாரிப்பு விநியோகம் மற்றும் கட்டுப்பாட்டு இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் நூற்றுக்கு மூன்று, நான்கு வீதமான சதிகாரர்கள், நாசகாரர்கள் இருக்கின்றனர். அந்த நூற்றுக்கு மூன்று, நான்கு வீதமானவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பொறுப்புடன் பதவிகளுக்கு வரும்போது, சில நேரங்களில் எண்களை மாற்றுவதன் மூலம், அரசைக் கவிழ்க்க முடியும் என்று நினைத்து பணியாற்றி இருக்க வேண்டும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத் தலைவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக எதிர்காலத்தில் ஒழுக்காற்று விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, தவறிழைத்தனர் என்று நிரூபிக்கப்பட்டால் அவர்களுக்கு உரிய தண்டனை வழங்க எதிர்பார்க்கின்றோம் - என்றார். (ஏ-4)

# வங்கித் துறை நெருக்கடிக்குள்

## ஹர்ச டி சில்வா தெரிவிப்பு

கொழும்பு, ஜுன் 22

ஒரு வங்கியிடமிருந்து இன்னொரு அரச வங்கி, டொலரைக் கொள்வனவு செய்யும் நடைமுறை காரணமாக, வங்கித்துறை நெருக்கடிக்குள்ளாகியுள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ச டி சில்வா தெரிவித்துள்ளார்.

அமைச்சர் உதய கம்மன்பில நாட்டின் வங்கித்துறை நெருக்கடியில் உள்ளது என்று தெரிவித்துள்ளார். நாட்டின் பொருளாதாரம் எவ்வளவு ஆபத்தான நிலையில் உள்ளது என்பதை தெரிவித்தமைக்காக அவருக்கு நன்றி தெரிவிக்க வேண்டும்.

எரிபொருள்களின் விலையை அதிகரிக்காவிட்டால், நாட்டின் வங்கித்துறை நெருக்கடிக்குள் தள்ளப்படும் என்ற உண்மையைக் கூறியமைக்காக அவருக்கு நன்றி தெரிவிக்கின்றோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஏ-4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பயணக் கட்டுப்பாடு நீக்கினாலும் பக்குவமாகச் செயற்பட்ட மக்கள்





## மன்னாரில் முன்னுதாரணம்

**மன்னார், ஜூன் 22**

**நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த நீண்ட பயணக் கட்டுப்பாடு நேற்று அதிகாலை முதல் நீக்கப்பட்டபோதும், மன்னார் மக்கள் வீடுகளுக்குள்ளேயே இருந்ததை அவதானிக்க முடிந்தது.**

கொரோனா 3ஆவது அலையின் கோரத் தாண்டவம் காரணமாக நாடு முழுவதும் பயணக் கட்டுப்பாடு நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது. அந்தப் பயணக் கட்டுப்பாடுகள் நேற்று அதிகாலை முதல் தளர்த்தப்பட்டன. தற்போது மன்னாரில் உள்ளூர் உற்பத்தியாளர்கள் தமது தாயாரிப்பு பொருள்களைச் சந்தைப்படுத்தியிருந்தனர்.

உள்ளூர் மற்றும் மாவட்ட ரீதியான அரச தனியார் போக்குவரத்துக்கள் உரிய சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி இடம்பெற்றன. எனினும் வடக்கின் ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடும்போது மன்னார் மக்கள் வீடுகளுக்குள்ளேயே இருந்தனர்.

இதனால் அத்தியாவசிய சேவைகள் வழங்கும் நிலையங்கள் மற்றும் வர்த்தக நிலையங்களைத் தவிர்ந்த ஏனைய கடைகள் மூடப்பட்டே இருந்தன. (ப-56)

# வங்கிகள், நகை அடகு வைக்கும் நிலையங்களில் மக்கள் கூட்டம்

## முல்லையில் நேற்று இந்த நிலை





முல்லைத்தீவு, ஜூன் 22

நாட்டில் அமுல்படுத்தப்பட்ட பயணத்தடை நேற்று அதிகாலை நீக்கப்பட்டதைத் தொடர்ந்து மக்கள் தங்களின் இயல்பு வாழ்வியல் நடவடிக்கையில் ஈடுபடத் தொடங்கினர். முல்லைத்தீவு மாவட்டத்தின், முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, முள்ளியவளை, ஒட்டுசுட்டான், மாங்குளம், மல்லாவி, விசுவமடு போன்ற பிரதேசங்களின் நகரப் பகுதிகளில் வங்கிகளிலும், நகை அடகுவைக்கும் கடைகளிலும் மக்கள் அதிகளவில் கூடினர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் வணிக நிலையங்கள் மற்றும் சந்தை வியாபாரிகளின் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டபோதும் மக்களின் நுகர்வில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என்று வணிகர்கள் தெரிவித்துள்ளார்கள்.

கடந்த ஒரு மாதத்துக்கு மேலாக நகரப் பகுதிகளில் உள்ள வணிக நிலையங்கள் மூடப்பட்டுள்ளதால் தங்களின் விற்பனைப் பொருள்கள் சில திகதி முடிவடைந்துள்ளதுடன் குளிர்சாதனப் பெட்டிகளில் உள்ள பொருள்கள் பல பாவனைக்கு எடுத்துக் கொள்ள முடியாத நிலையில் உள்ளன என்று நகரப் பகுதியில் உள்ள வணிகர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை தொழில் ரீதியில் முடக்கப்பட்ட நாளாந்தத் தொழிலாளர்கள் மற்றும் பெண்கள் ஆகியோர் பணத்தைப் பெற்றுக்கொள்வதற்காக வங்கிகளிலும் நகை அடகு வைக்கும் கடைகளிலும் நேற்றையதினம் கூடியிருந்தை அவதானிக்க முடிந்தது. (ப-19)

# சமூக இடைவெளியை மறந்த கொடிகாமம் மக்கள்

கொடிகாமம், ஜூன் 22

பயணத்தடை தளர்த்தப்பட்டதை அடுத்து நேற்று கொடிகாமம் சந்தையில் பெருமளவு மக்கள் கூடினர். பொருள்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டிய மக்கள் முகக்கவசம் அணிந்திருந்த போதிலும் சமூக இடைவெளியைப் பேணாது செயற்பட்டதை அவதானிக்க முடிந்தது. இதேவேளை சாவகச்சேரி பகுதியிலும் வங்கிகளுக்குச் சென்றவர்களும் சமூக இடைவெளியைப் பின்பற்றத் தவறியிருந்தனர். (ப-159)








# வவுனியாவில் மக்கள் கூட்டம்: நிரம்பி வழிந்தன 'பார்கள்'

வவுனியா.ஜூன் 22

நாடளாவிய ரீதியாக அமுல்படுத்தப்பட்டிருந்த பயணத்தடை நேற்று அதிகாலை முதல் தளர்த்தப்பட்டுள்ளதைத் தொடர்ந்து வவுனியா நகருக்குள் நுழையும் பொதுமக்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

வவுனியா நகரில் அத்தியாவசிய உணவுப் பொருள்களை விற்பனைசெய்யும் கடைகள், மருந்தகங்கள், வங்கிகள் மற்றும் மதுபான நிலையங்கள் உட்பட அனைத்து வியாபார நிலையங்களும் நேற்று திறக்கப்பட்டன. பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கும் பல்வேறு தேவைகள் நிமித்தமும் அதிகமாக மக்கள் ஒன்றுகூடினர். இதனால் நகரின் முக்கிய பகுதிகளில் போக்குவரத்து நெரிசல் ஏற்படும் நிலை உருவானது.

இதேவேளை வவுனியாவிலிருந்து தனியார் மற்றும் அரச பஸ்கள் வடக்கு மாகாண ரீதியாக மட்டுப்படுத்தப்பட்ட அளவில் தமது சேவைகளை முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. நீண்ட நாள்களுக்குப் பின்பாக மதுபான நிலையங்கள் திறந்திருக்கப்பட்டதால் மதுபானத்தைக் கொள்வனவுசெய்வதற்கு மதுபான நிலையங்களின் முன்பாக அதிக கூட்டம் கூடியது. (ப-110)

# சுகாதார விதிமுறைகளை மீறிய 162 பேருக்கு பி.சி.ஆர். சோதனை



பருத்தித்துறை, ஜூன் 22

பருத்தித்துறை மீன்சந்தைப் பகுதியில், சுகாதார விதிமுறைகளைக் கடைப்பிடிக்காத 162 பேருக்கு நேற்றுமுன்தினம் பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையின் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் எழுமாற்று பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

கடந்த சில நாள்களாக பருத்தித்துறை கொட்டடி மீன் சந்தையில் அதிகளவான மக்கள் சமூக இடைவெளியைப் பொருட்படுத்தாது மீன் கொள்வனவு செய்வதற்காக ஒன்று கூடுவதும், முகக்கவசம் இன்றி நடமாடுவதும் அவதானிக்கப்பட்டு வந்தது.

இதனால் தொற்று பரவும் அபாயமும் காணப்பட்டது. பொதுமக்கள் கூடும் இடங்களில் தொற்று ஏற்படுகின்றதா என்பதை பரிசோதிப்பதற்காக, கொட்டடி மீன் சந்தையை இலக்கு வைத்து எழுமாற்று பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

காலை 8 மணி முதல் 11 மணி வரை மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனைகளில் 162 பேர் பங்குபற்றினர். (ப-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லை கல்வி வலயத்துக்கு புதிய பணிப்பாளர் நியமனம்

முல்லைத்தீவு,ஜூன் 22

முல்லைத்தீவு வலயத்துக்கு கல்விப் பணிப்பாளராக இ.தமிழ்மாறன் நியமிக்கப்பட்டுள்ளார் என்று வடக்கு மாகாண கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

கடந்த ஒரு மாதத்துக்கு முன்னர் முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் ஓய்வு பெற்று சென்றதை அடுத்து தற்போது இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

புதிய கல்விப் பணிப்பாளர் எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி கடமையைப் பொறுப்பேற்பார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-13)



# கொரோனா ஆபத்து
# தொழிற்சாலை ஊழியர்களுக்கு தடைபோட்டனர் கிராம மக்கள்

**வவுனியா, ஜூன் 22**

**வவுனியா ஈஸ்வரிபுரம் கிராமத்தில் இருந்து ஆடைத் தொழிற்சாலைக்கு பணிக்குச் செல்பவர்களை ஊர் மக்கள் தடுத்து நிறுத்தியதுடன் அவர்களை ஏற்றிச்செல்ல வந்த பஸ்களையும் திருப்பி அனுப்பினர்.**

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றது.

வவுனியாவில் ஆடைத்தொழிற்சாலைகளில் கொரோனாத் தொற்றாளர்கள் அதிகரித்து வரும் நிலையில் ஈஸ்வரிபுரம் கிராமத்திலும் சிலர் கொரோனாத் தொற்றுக்குள்ளான நிலையில் அடையாளம் காணப்பட்டனர். இந்த நிலையில் கிராம மக்கள் ஆடைத் தொழிற்சாலைக்கு செல்பவர்களாலேயே தமது கிராமத்துக்குள் தொற்று ஏற்பட்டது என்று தெரிவித்து தமது கிராமத்தில் இருந்து ஆடைத் தொழிற்சாலைக்குச் செல்பவர்களைத் தடுத்து நிறுத்தினர்.

பணியாளர்களை ஏற்றிச்செல்வதற்கு வந்த பஸ்களை திருப்பி அனுப்பினர்.

இதனையடுத்து ஆடைத் தொழிற்சாலை நிர்வாகத்தினர் கிராம மக்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டிருந்தனர். எனினும் மக்கள் உடன்பாட்டுக்கு வராத நிலையில் ஈச்சங்குளம் பொலிஸார் சம்பவ இடத்துக்கு வரவழைக்கப்பட்டனர்.

அவர்கள் பணியாளர்களைத் தடுப்பதற்கு மக்களுக்கு அதிகாரம் இல்லை என்று தெரிவித்தனர். பணியாளர்கள் அனைவரும் இன்று பணிக்கு வருகை தரவேண்டும் என்று நிர்வாகத்தினர் தெரிவித்தனர். மக்கள் கலைந்துசென்றதை அடுத்து சில பணியாளர்கள் வீடுகளுக்கும், சிலர் தொழிற்சாலைக்கும் சென்றனர். (ம-ப-110)

# ஹெரோய்னுடன் இருவர் கைது

கிளிநொச்சி,ஜூன் 22

கிளிநொச்சி சுண்டிக்குளம் பகுதியில் ஹெரோய்ன் வைத்திருந்த குற்றச்சாட்டில் இருவரை தருமபுரம் பொலிஸார் நேற்றுமுன்தினம் கைதுசெய்துள்ளனர். பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது சந்தேகநபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர்.

இவர்களிடமிருந்து 60 கிராம் ஹெரோய்ன் போதைப்பொருளையும், இரண்டு மோட்டார் சைக்கிள்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

சந்தேகநபர்கள் இருவரையும் கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். (ஐ-214)

# நாயுடன் மோதி பெண் காயம்

சாவகச்சேரி,ஜூன் 22

நுணாவில் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு மோட்டார் சைக்கிளில் பயணித்த பெண் ஒருவர், குறுக்கே வந்த நாயுடன் மோதியதில் காயமடைந்துள்ளார். விபத்தில் நுணாவில் மேற்கு சாவகச்சேரியைச் சேர்ந்த 46 வயதுடைய பெண்ணே காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஐ-159)

# நோயாளர்களை பார்வையிட பாஸ் நடைமுறை

வவுனியா,ஜூன் 22

வவுனியா மருத்துவமனையில் நோயாளர்களை பார்வையிட வருவோருக்கு "பாஸ்" நடைமுறை கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது.

நாட்டில் கொரோனாத் தொற்று அதிகரித்து வரும் நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெறும் நோயாளர்களை பார்வையிட ஒருவரை மாத்திரம் அனுமதிப்பதற்காகவே குறித்த "பாஸ்" நடைமுறை கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-110)





# வன்னேரிக்குளத்தில் உடைப்பு நீரைப் பாதுகாத்த விவசாயிகள்

கிளிநொச்சி, ஜூன் 22

கிளிநொச்சி வன்னேரிக்குளத்தின் தென்பகுதியில் ஏற்பட்ட உடைப்பை அடுத்து, குளத்து நீர் வெளியேறாது, விவசாயிகளால் மண் மூடைகள் அடுக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டுள்ளது என்று கிளிநொச்சி மேற்கு நீர்ப்பாசனப் பொறியியலாளர் ரி.ரிசியந்தன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

வன்னேரிக்குளத்தின் தென்பகுதியில் குளத்து நீர், ஆறு வழியாக வெளியேறாமல் கடந்த காலங்களில் மண் மூடைகள் அடுக்கியும் மண் அரண்கள் அமைத்தும் பாதுகாக்கப்பட்டது. குறித்த இடத்தில் கடந்த சனிக்கிழமை உடைப்பு ஏற்பட்டது. இதனை அடுத்து விவசாயிகளால் மண் மூடைகள் அடுக்கப்பட்டு குளத்து நீர் வெளியேறாமல் பாதுகாக்கப்பட்டுள்ளது. குறித்த இடத்தில் நிரந்தர கட்டுமானத்துக்கான நிதி கிடைத்தவுடன் வேலைகள் ஆரம்பிக்கப்படும்- என்றார். (ப-13)

# இரணைதீவுக் கடலில் அமைக்கப்பட்ட இரும்பு வேலிகள் அகற்றப்பட வேண்டும்

## செபஸ்தியார்புரம் மீனவர்கள் கோரிக்கை

கிளிநொச்சி, ஜூன் 22

கிளிநொச்சி- பூநகரி இரணைமாதா நகருக்கும் இரணைதீவுக்கும் இடையில் கடற்பரப்பில் கடல் அட்டை வளர்ப்புக்காக இரும்புவேலிகள் அமைக்கப்பட்டு பண்ணைத் தொழில் மேற்கொள்ளப்படுவது பாரம்பரிய கடற்றொழிலுக்கு இடையூறாக உள்ளது என்று முழங்காவில் செபஸ்தியார்புரம் கடற்றொழிலாளர்கள் தெரிவித்தனர்.



செபஸ்தியார்புரத்தில் பாரம்பரிய கடற்றொழிலை நம்பி வாழும் 55 குடும்பங்கள் உள்ளன. கடற்றொழில் நீரியல் வள அமைச்சால் இரணைதீவு கடற்பகுதியில் கடலட்டை வளர்ப்பதற்கான பண்ணைகள் அமைக்கப்பட்டு அதற்கான இரும்புக் கம்பி வேலிகள் பாதுகாப்புக்கான கொட்டகைகள் மற்றும் மின் வெளிச்சம் ஆகியவை அமைக்கப்பட்டு கடற்பகுதி மாற்றப்பட்டுள்ளது. இதனால் பாரம்பரிய கடற்றொழிலான கரையோர மீன்பிடி, இறால், நண்டு மற்றும் கணவாய்த்தொழில் என்பவை பாதிப்புக்குள்ளாகியுள்ளன.

அத்தோடு பண்ணைகளை சுற்றி தொழிலுக்குச் சென்றுவருவதால் எரிபொருள் செலவு சற்றேயாக அதிகரித்துள்ளது. மேலும் பண்ணையாளர்களைத் தெரிவுசெய்வதிலும் நாம் புறக்கணிக்கப்பட்டுள்ளோம். பண்ணைக்கான கடல் பாடுகள் வழங்கல் அரசியல் இலாபத்தோடு இடம்பெற்றுவருவதோடு, அயற் கிராம தொழிலாளிகளுக்கிடையில் முரண்பாடுகளும் சண்டைகளும் ஏற்பட்டு வருகின்றன. இந்த நிலையில் இரணைதீவு கடற்பரப்பில் பாரம்பரிய கடற்றொழிலை மேற்கொள்வதற்கான வழிகள் உருவாக்கப்பட வேண்டும்.

இரணைதீவுக் கடற்பரப்பில் கடல் அட்டை வளர்ப்புக்காக இரும்பு வேலிகள் கொண்டு அமைக்கப்பட்டுள்ள வேலிகள் அகற்றப்பட வேண்டும். ஏனெனில் கடலில் பாரம்பரிய கடற்றொழில் மேற்கொள்வதற்கு இரும்பு வேலிகள் தடையாக உள்ளன என்றனர். (ப-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ.வியாசன்
இந்துநாகரிகத்துறை
இந்துக்கற்கைகள் பீடம்
யாழ்ப்பாணப் பல்கலை

# சாதனைப் பெண்மணி தங்கம்மா அப்பாக்குட்டி

இந்துப் பெண்கள் பற்றிய விழிப்புணர்வுகள் இருபதாம் நூற்றாண்டில் ஏற்படுவதற்கும் சமூக நிலையில் மேம்பாடு அடைவதற்கும் வாய்ப்பாக பத்தொன்பதாம் நூற்றாண்டின் நவீன சீர்திருத்தங்களது செயற்பாடுகளே அடித்தளம் இட்டன என்பது உண்மையாகும். இத்தகைய பின்னணியில் யாழ்ப்பாணத்து சைவப் பெண்களின் கல்வி வளர்ச்சிக்கு முன்னின்று உழைத்தவர்தான் கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி.

இவர் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் தேவஸ்தானத்தை மையப் புள்ளியாகத் தகவமைத்துக் கொண்டு, பல தளங்களில் பல்வேறுபட்ட பணிகளைப் புரிந்து இலங்கையின் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த சைவத்தமிழ்ப் பெண்மணியாகத் திகழ்ந்தார். அம்மையார் பேச்சாற்றல், சிறந்த முகாமைத்துவத்திறன், கலை இலக்கிய ஆளுமை, அஞ்சாமையும் அர்ப்பணிப்பும் நிறைந்த சேவை மனபாங்கு என்பவற்றை கொண்டவராவார்.



**கல்வியும் கற்பித்தலும்**

இவர் யாழ்பாணம் தெல்லிப்பழையில் 1925ஆம் ஆண்டு தை மாதம் 7ஆம் திகதி பிறந்தார். மல்லாகத்தில் அமெரிக்கன் மிஷன் பாடசாலை, விசாலாட்சி வித்தியாசாலை, அளவெட்டி சதானந்த வித்தியாசாலை என்பவற்றில் தொடக்கக் கல்வியைக் கற்றார். பின்னர் சுன்னாகம் இராமநாதன் கல்லூரியிலே இடைநிலைக்கல்வியைப் பயின்று 1941ஆம் ஆண்டு முதல் 1944ஆம் ஆண்டு வரை இராமநாதன் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பயிற்சி பெற்றார். ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் நடத்திய 'பண்டிதர்' தேர்விலும் சைவ சித்தாந்த சமாஜம் நடத்திய 'சைவப்புலவர்' தேர்விலும் வெற்றி பெற்றார். பண்டிதையாகவும் சைவப்புலவராகவும் விளங்கிய சிவத்தமிழ்செல்வி 1946ஆம் ஆண்டு முதல் மட்டக்களப்பு சென்.சிசிலியா ஆங்கிலப் பாடசாலையிலும் 1949ஆம் ஆண்டு முதல் கொழும்பு பாத்திமா பெண்கள் பாடசாலையிலும் பின்பு அளவெட்டி சதானந்த வித்தியாலயத்திலும் 1964ஆம் ஆண்டு முதல் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியிலும் ஆசிரியப் பணி செய்துள்ளார். சாதி மத பேதமின்றி சேவை மனப்பான்மையுடனும் கடமையுணர்வுடனும் கற்பிக்கும் கல்வி என்றும் பலன் தரக்கூடியது என்பதை ஆதாரப்படுத்தி வாழ்ந்தவர் அம்மையார் என்பதில் மிகையில்லை. இக்காலகட்டங்களில் ஏற்பட்ட அனுபவம்தான் அம்மையாரைப் பொது வாழ்வுக்கு உந்தித்தள்ளிற்று. கிறிஸ்தவ அருட்சகோதரிகளின் தியாகம், நேரம் தவறா இயல்பு, அருட்பணி என்பவையும் இஸ்லாமியப் பெண்களின் கலாசார உணர்வும் அம்மையாரைக் கவர்ந்தன. அதே வேளை சமூகத்தின் பெண்களின் நிலை பற்றிய தெளிவும் ஏற்பட்டது. இனம், மொழி, சமயம், ஜாதி என்பவற்றிக்கு அப்பால் பெண்கள் கல்வி, அரசியல், பொருளாதாரம், கலை என யாவற்றிலும் வரவேண்டும். அதே வேளை தத்தம் இனம், மொழி, சமயப் பாரம்பாரியங்களை, பண்பாடுகளைப் பேண வேண்டும் என்றும் அவர் கருதினார்.

இலங்கையில் சைவத்தமிழ்ப் பண்பாட்டு வளர்ச்சியில் சைவப் பெண்கள் பலரும் அவ்வவ்போது ஈடுபாடு காட்டி வந்துள்ளபோதும், சைவசமய சமூகப்பணிகளால் சைவப்பண்பாட்டை யாழ்ப்பாணத்தில் நிலைநிறுத்த அரும்பாடுபட்ட முதன்மையான கணிப்பினைப் பெறும் சைவத்தமிழ்ப் பெண்ணாக, அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி தன்னை அடையாளப்படுத்திக் கொண்ட சிறப்புக்குரியவராகத் திகழ்கின்றார். பத்தொன்பதாம் நூற்றாண்டில் சைவப்பிரசங்கத்தின் தந்தையாக ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் விளங்குவது போன்று, இருபதாம் நூற்றாண்டில் சைவச் சொற்பொழிவின் தாயாக அன்னை கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி விளங்கினார்.

**சொற்பொழிவுகளால் பெருமை பெற்றார்**

தமிழ்நாட்டு சொற்பொழிவுக்கு அழைக்கப்பட்டிருந்த சிவத்தமிழ்ச்செல்வி ஈழத்தவர்கள் பெருமை பெறக்கூடிய வகையில் அங்கே தமது ஞானத் திறனை வெளிப்படுத்தினார். 1965ஆம் ஆண்டில் சிதம்பரத்தில் நடைபெற்ற சைவசித்தாந்த சமாஜ வைர விழாவில் மாணிக்கவாசகரின் ஞான உள்ளம் பற்றி ஆற்றிய உரை எல்லோரையும் கவர்ந்தது. 1966ஆம் ஆண்டில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் 'இளங்கோ போற்றிய பெருமை' பற்றிய இலக்கிய சொற்பொழிவைக் கேட்டின்புற்றவர்கள் பெரிதும் பாராட்டினார்., 1973ஆம் ஆண்டில் திருவிடைமருதூரில் நடந்த திருமுறைக் கருத்தரங்கில், திருவாடுதுறை ஆதீனத்தின் அழைப்பின் பேரில் சென்ற இவர், மகளிர் மாநாட்டுக்குத் தலைமையேற்று நடத்தினார். இவ்வாறான மாநாடு ஒன்றில் தலைமை ஏற்ற முதலாவது ஈழத்துத் தமிழ்ப்பெண் என்ற பெருமை ஈட்டித்தந்தார். திருச்சி சாரதா மகளிர் மன்றத்திலும் இவரின் உரை இடம்பெற்றது. 1976ஆம் ஆண்டில், கும்பகோணம் குடத்தைச் சிவனடியார் திருக்கூட்டம் ஏற்பாடு செய்திருந்த திருமுறை விழாவின் இரண்டாம் நாள் விழாவுக்கு தலைமை ஏற்று நடத்தினார்.,

"1973ஆம் ஆண்டில் திருவிடை மருதூரில் நடந்த திருமுறைக் கருத்தரங்கில், திருவாடுதுறை ஆதீனத்தின் அழைப்பின் பேரில் சென்ற இவர், மகளிர் மாநாட்டுக்குத் தலைமையேற்று நடத்தினார். இவ்வாறான மாநாடு ஒன்றில் தலைமை ஏற்ற முதலாவது ஈழத்துத் தமிழ்ப்பெண் என்ற பெருமை ஈட்டித்தந்தார்

1977ஆம் ஆண்டில், திருவிடை மருதூரில் நடைபெற்ற திருவாசக விழாவில் இவர் ஆற்றிய உரை பலரின் நெஞ்சை உருக்கியது. திருக்கோவிலூர் ஞானானந்த சுவாமிகள் ஜெயந்திப் பெருவிழாவிலும் சொற்பொழிவாற்றினார், 1978ஆம் ஆண்டில் சிவகங்கையில் நடைபெற்ற சைவசித்தாந்த மகாநாட்டின் மாதர் மாநாட்டுக்குத் தலைமை தாங்கி உரை நிகழ்த்தினார். 1979ஆம் ஆண்டில், புதுக்கோட்டை அரசின் ஆதரவில், சாயி மாதா சிவபிருந்தாதேவி ஏற்பாடு செய்திருந்த உலகளாவிய இந்து மாநாட்டில் இவர் ஆற்றிய உரை இவரின் புகழை மேலும் உயர்த்தியது.

1979ஆம் ஆண்டில், புதுக்கோட்டை அரசின் ஆதரவில், சாயி மாதா சிவபிருந்தாதேவி ஏற்பாடு செய்திருந்த உலகளாவிய இந்து மாநாட்டில் இவர் ஆற்றிய உரை இவரின் புகழை மேலும் உயர்த்தியது.

1980ஆம் ஆண்டில், வட ஆற்காடு ஆரணியில் நடைபெற்ற சைவசித்தாந்த சமாஜத்தின் மங்கையர் மாநாட்டில் தலைமையேற்று உரை நிகழ்த்த இவரையே அழைத்தனர். இவை தவிர, தமிழ் நாட்டில் சேலம், கோயம்புத்தூர்;, பொள்ளாச்சி, திருச்சி முதலிய இடங்களில் ஆற்றிய உரைகள் கல்விமான்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்றன. தமிழ்நாடு மட்டுமின்றி தென்கிழக்காசிய நாடுகள், புலம்பெயர் மக்கள் வாழுகின்ற நாடுகளில் அம்மையார் சென்று சொற்பொழிவை நிகழ்த்திப் பாராட்டுப் பெற்றார்.

நாவலர் பெருமானுக்குப் பின் உயிர்த்துடிப்புள்ள சகாப்தத்தை உருவாக்கியவர் சிவத்தமிழ் செல்வி அவரது சொற்பொழிவுப் பணி அறிவுத்திறனையும் புலமையையும் வெளிப்படுத்தியது. சைவ இலக்கியம், சைவ சித்தாந்தம், சமய ஒழுக்கம் முதலாகப் பல விடயங்களை பற்றி இவர் யாழ்பாணத்திலும், இலங்கையின் பல இடங்களிலும் இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், லண்டன் போன்ற நாடுகளிலும் சொற்பொழிவாற்றினார்.



அவரது இப்பணிகளை பலரும் போற்றிக் கௌரவித்தனர். ஏராளமான நாடுகள் ஏராளமான கௌரவப் பட்டங்களை அன்னாருக்கு வழங்கின.

சைவத் தமிழ்த் தொண்டென்பது அவரது உயிருடன் கலந்த உணர்வாக விளங்கியது. இந்த உணர்வும் அவர் கொண்டிருந்த ஓர்மமும் தலைமைத்துவமும்தான் இன்று தங்கம்மா அப்பாக்குட்டியை ஒரு சாதனைப் பெண்ணாக மாற்றியிருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள்

**மேடம்:** மருத்துவ செலவுகள் குறையும். வியாபாரப் பிரச்சினைகள் தீரும். அனுபவசாலி ஒருவரின் அறிமுகம் உதவிக்கரமாக இருக்கும்.

**இடபம்:** மற்றவர்களின் பணியை ஏற்றுச் செய்து மகிழ்ச்சி தருவீர்கள். பணி முயற்சிகளில் சாதகமான பலன் தாமதமாகும். எந்த வயதினருக்கும், உரிய உழைப்புக்கு பலன் கிடைக்கும்.

**மிதுனம்:** குடும்பத்தினரிடையே அன்பு கூடும். திடீர் நன்மை வரும். மற்றவர்க்கு, உங்கள் மீது மதிப்பு உயரும்படி செயல்படுவீர்கள். பணியிடத்தில் இருந்து வந்த சுமீபத்திய நிலை மாறும்.

**கடகம்:** கருணை அதிகரிக்கும். தெய்வீக சிந்தனைகள் கூடும். உணவு விஷயத்தில் கவனமாக இருந்தால் ஆரோக்கியம் பிழைக்கும். உறவினர் மூலம் நன்மைகள் உண்டு.

**சிம்மம்:** பிள்ளைகளின் திருமணப் பேச்சுவார்த்தை சாதகமாக முடியும். தடைகள் நீங்கி, வெளிநாடு செல்லும் வாய்ப்பு கண்ணுக்குத் தெரியும். வீண்செலவுகள் தீரும்.

**கன்னி:** சுமீபத்தில் மனதை ஆக்கிரமித்திருந்த மகிழ்ச்சிக் குறைவு நீங்கும். பிறரை நம்பி எந்தவித வாக்குறுதியும் கொடுக்க வேண்டாம். வாழ்க்கைத்துணைக்கு ஏற்பட்ட பிரச்சினைகள் தீரும்.

**துலாம்:** வழக்குகளின் போக்கு மிகவும் மந்தமாகவே இருக்கும். தனிப்பட்ட விவகாரங்களில் முன்பைவிட முன்னேற்றம் இருக்கும். அவ்வப்போது மந்தமான நிலை காணப்பட்டாலும் இனிய நாளே.

**விருச்சிகம்:** வாழ்வில் வளம் சற்றுக்கூடும். சிறு பயணத்தால் நன்மை வரும். அதிகாரிகளிடம் பேசும்போது நிதானத்தைக் கையாள வேண்டும். அபூர்வமாகக் கிடைக்கும் வாய்ப்பு ஒன்று வரவிருக்கிறது..

**தனுசு:** வெளிநாடுகளுக்கு செல்லும் விருப்பம் தாமதமாகும். பெரிய திட்டம் ஒன்று சிறு தடைகளுக்குப்பின் நிறைவேறும். குடும்பத்தில் மகிழ்ச்சியும் கவலையும் மாறி மாறி நிலவும்.

**மகரம்:** பெயர், புகழை நிலைநிறுத்த கடினமாக உழைப்பீர்கள். கிடைக்கும் வாய்ப்பைப் பயன்படுத்தப் பாடுபடுவீர்கள். வீட்டிலும் வெளியிலும் சுற்றியிருப்போரின் ஆதரவைப் பெறுவீர்கள்.

**கும்பம்:** ஒப்பந்தங்களில் கையெழுத்திடும்போது கவனம் தேவை. மேற்கொள்ளும் பணிகளில் எதிர்நீச்சல் போட்டு;தான் முன்னேற முடியும். வார்த்தைகளை கவனத்துடன் பயன்படுத்துவது நல்லது.

**மீனம்:** மற்றவர்களின் பொறுப்பு எதையும் ஏற்க வேண்டாம். உடல்நிலையில் சிறு பாதிப்பு தோன்றி உடனே சரியாகும். எடுத்த பணியில் முழுமூச்சாக ஈடுபட்டு அதை முடிக்க வேண்டி வரும்.




## விஜய்யின் 65ஆவது பட 'ஃபர்ஸ்ட் லுக்' வெளியாகியது

நடிகர் விஜய் சன் பிக்சர்ஸ் தயாரிப்பில் தனது 65 வது படத்தில் நடித்து வருகிறார். இந்தப் படத்தை இயக்குநர் நெல்சன் திலீப்குமார் இயக்கி வருகிறார். இந்தப் படத்தில் நடிகைகள் பூஜா ஹெக்டே, அபர்ணா தாஸ் ஆகியோர் நடிக்கின்றனர். மேலும் யோகி பாபு, விடிவி கணேஷ் உள்ளிட்டோரும் இந்தப் படத்தில் நடிக்கின்றனர்.

இப்படத்துக்கு அனிருத் இசையமைக்கிறார். இந்நிலையில் இப்படத்தின் ஃபர்ஸ்ட் லுக் நேற்று வெளியாகியுள்ளது.

அதன்படி விஜய் நடிக்கும் 65வது படத்துக்கு பீஸ்ட் (Beast) என பெயரிடப்பட்டுள்ளது.

'Beast' என்ற ஆங்கில சொல்லுக்கு தமிழில் மிருகம் என்று பொருள். படத்தின் பெயரே மிரட்டலாக உள்ளதால் படம் குறித்த எதிர்பார்ப்பு இப்போதே எகிறியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சப்பாணி @manipmp
ஆயிரம் அறிவுரை சொல்லி திருந்தாதவன், ஒரு நோய் அவனை திருத்திவிடுகிறது

குழந்தைகளின் அமைதிக்குப் பின்னால் ஒரு ஆன்ராய்ட் போன் இருக்கும்

mohanram.ko @
எல்லாப் பிரச்சனைகளுக்கும் காரணமும் இருக்கிறது, தீர்வும் இருக்கிறது. நாம் எதற்கு முக்கியத்துவம் கொடுக்கிறோம் என்பதில் அடங்கி இருக்கிறது வாழ்க்கை.

## twitter

twitter.com/myck @smbsultan
இந்த உலகில் பலர் நல்லவர்களை பார்க்க விரும்புகிறார்களே தவிர... நல்லவர்களாக இருப்பதற்கான முயற்சியை மேற்கொள்வதில்லை...

## ஜப்பானில் தயாரிக்கப்பட்ட உலகின் மிகப்பெரிய 'மாஸ்க்'





ஜப்பானில் 35 கிலோ எடையுள்ள உலகின் மிகப்பெரிய மாஸ்க் ஒன்றை வடிவமைத்து அதனை பிரமாண்ட சுவாமி சிலைக்கு அணிவித்துள்ளனர்.

உலகம் முழுவதையும் கடந்த ஒன்றரை ஆண்டுகளாக அச்சுறுத்திவரும் கொரோனா வைரஸ் காரணமாக மாஸ்க் அணிதல், சமூக இடைவெளியை கடைப்பிடித்தல் உள்ளிட்ட தடுப்பு வழிமுறைகள் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில் உலகின் மிகப்பெரிய மாஸ்க் ஜப்பானில் தயாரிக்கப்பட்டுள்ளது. குறித்த மாஸ்க்கின் எடை சுமார் 35 கிலோ என்றும் சுமார் 5.3 மீற்றர் கொண்டது என்றும் கூறப்படுகினறது.

இளஞ்சிவப்பு நிற துணியால் செய்யப்பட்ட இந்த மிகப் பெரிய மாஸ்க் ஜப்பானின் புகுஷிமா மாகாணத்தில் உள்ள 187 அடி உயரம் கொண்ட பெண் தெய்வத்துக்கு அணிவித்துள்ளனர்.

## 'மாஸ்க்' இன் உபயோகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அச்சிடல் பெறுகைக்கான அழைப்பு - 2021 / 2022
### வலயக்கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்.
### NP/41/20/1/3/PROC/2021/10

யாழ்ப்பாணம் வலயக்கல்வி அலுவலகத்தின் 2021/ 2022 ஆம் ஆண்டுக்கான பரீட்சை வினாத்தாள் மற்றும் அச்சிடலுக்கான பெறுகை நடவடிக்கை தொடர்பாக 18.05.2021 ஆம் திகதிய பத்திரிகையில் விளம்பரப்படுத்தியிருந்தோம். COVID 19 காரணமாக நாட்டில் ஏற்படும் அசாதாரண சூழ் நிலையால் கேள்விப் படிவம் வழங்கல் மற்றும் விலைக் கேள்வி ஏற்பு திகதிகளில் கீழ்வருமாறு மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

**கேள்வி படிவம் வழங்கல் - 25.06.2021 ஆம் திகதி 15.00 மணி வரை**
**விலைக் கேள்விகள் ஏற்பு - 28.06.2021 ஆம் திகதி 10.00 மணி வரை**

மேலதிக விபரங்களினை அலுவலக நேரங்களில் கணக்காளர், வலயக் கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம் 021 222 2647 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

பெயர் : மு.இராதாகிருஷ்ணன்
பதவி : தலைவர் / வலயக் கல்வி பணிப்பாளர், பிராந்திய பெறுகைக்குழு
முகவரி : வலயக் கல்வி அலுவலகம் - யாழ்ப்பாணம், செம்மணி வீதி, நல்லூர்.
தொலைபேசி : 021 222 2647
தொலைநகல் : 021 222 2647
மின்னஞ்சல் : acctjaf@gmail.com



## INVITATION FOR BID 2021/05
### Regional Directorate of Health Services Jaffna

**கட்டட வேலைகளுக்கான விளம்பரம் தொடர்பானது,**

மேற்படி விடயம் தொடர்பாக, 16.06.2021 இல் எம்மால் விளம்பரம் செய்யப்பட்ட கட்டட வேலைகளுக்கான விளம்பரத்தினை உதயன், தினக்குரல், Daily News பத்திரிகைகளிலும் மேலதிகமாக மாகாணசபையின் இணையத்தளத்தினூடகவும் பார்வையிடமுடியும் என்பதை அறியத்தருகின்றேன்.

1. Bids shall be accompanied by a Bid security as per the information given in the Table.

| CATEGORY I | | |
|---|---|---|
| | Document Issuing/Purchasing Period | From 16.06.2021 until 29.06.2021 |
| | Pre-Bid Conference | At 02.30 P.M on 22.06.2021 |
| | Closing and Opening of Bids | At 10.30 A.M on 30.06.2021 |

| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period | Grade Required | Non-Refundable Fees | Required Bid Security: Security Amount | Required Bid Security: Validity Period |
|---|---|---|---|---|---|---|---|
| NP/04/41/2021/LM/W/05 | Modification of RDHS Office Administrative area and Store at pannai jaffna. | 9.25 | 128 Days | C7 and C6 (Buildings) | 3,500.00 | 93,000.00 | Till 13.10.2021 |
| NP/04/41/2021/LM/W/06 | Construction of MO Quarters at DH Varani | 6.48 | 113Days | C7 and C6 (Buildings) | 3,500.00 | 65,000.00 | Till 13.10.2021 |
| NP/04/41/2021/LM/W/07 | Improvement Work at Cancer unit Base Hospital Tellippalai,Jaffna. | 5.12 | 106 Days | C7 and C6 (Buildings) | 3,500.00 | 52,000.00 | Till 13.10.2021 |
| NP/04/41/2021/LM/W/08 | Construction of Staff Quarters (A) at DH Atchchuvely | 3.33 | 91Days | C 8or C7 (Buildings) | 1,500.00 | 34,000.00 | Till 29.09.2021 |
| NP/04/41/2021/LM/W/09 | Construction of Staff Quarters (B) at DH Atchchuvelly | 3.33 | 91Days | C8 or C7 (Buildings) | 1,500.00 | 34,000.00 | Till 29.09.2021 |
| NP/04/41/2021/LM/W/10 | Construction of Staff Quarters at DH Kodikaamam | 3.33 | 91Days | C8 or C7 (Buildings) | 1,500.00 | 34,000.00 | Till 29.09.2021 |
| NP/04/41/2021/LM/W/11 | Extension of Conference Hall) at MOH Changanai | 2.79 | 86 Days | C8 or C7 (Buildings) | 1,500.00 | 28,000.00 | Till 29.09.2021 |
| NP/04/41/2021/CBG/W/01 | Construction of Library at Base Hospital Tellippalai,Jaffna. | 6.62 | 114 Days | C7 and C6 (Buildings) | 3,500.00 | 67,000.00 | Till 13.10.2021 |
| NP/04/41/2021/CBG/W/02 | Electrical Renovation at Kopay Divisional Hospital - Jaffna. | 1.27 | 73 Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 13,000.00 | Till 15.09.2021 |

| CATEGORY II | | |
|---|---|---|
| | Document Issuing/Purchasing Period | From 16.06.2021 until 06.07.2021 |
| | Pre-Bid Conference | At 02.30 P.M on 25.06.2021 |
| | Closing and Opening of Bids | At 10.30 A.M on 07.07.2021 |

| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period | Grade Required | Non-Refundable Fees | Required Bid Security: Security Amount | Required Bid Security: Validity Period |
|---|---|---|---|---|---|---|---|
| NP/04/41/2021/PSSP/W/07 | Improvement Works to Accident & Emergency Unit Building at Base Hospital, Chavakachcheri, Jaffna | 14.00 | 154 Days | C6 or C5 (Buildings) | 5,000.00 | 140,000.00 | Till 19.10.2021 |

**Chairman**
**Regional Procurement Committee**
**Regional Directorate of Health Service,**
**Jaffna.**


# தனியார் பல்கலைக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஜூன் 22

கொத்தலாவல தனியார் பல்கலைக்கழக சட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் நேற்று எதிர்ப்பு ஆர்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.
இதன் போது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த மாணவ குழுக்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாடுகளால் அங்கு அமைதியற்ற நிலை ஏற்பட்டது.
கொழும்பு கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்னால் அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் இந்த ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.
நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த போக்குவரத்துக் கட்டுப்பாடு தளர்த்தப்பட்டிருந்தாலும், நாட்டில் தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த் தடுப்பு முறைகள் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. அதற்கமைய மக்கள் ஒன்றுக்கூடுவதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ள நிலையில், இவ்வாறு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.
இந்த ஆர்ப்பாட்டத்தில் ஐம்பதுக்கும் அதிகமான பல்கலைக்கழக மாணவர்கள் கலந்துகொண்டனர். இவர்கள் ஜனாதிபதியைப் போன்ற உருவ பொம்மையொன்றுடன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். குறித்த உருவப் பொம்மையை மாணவர்கள் எரிக்க முற்பட்ட போதே பொலிஸாருடன் முரண்பாடு ஏற்பட்டது.
எனினும் அந்த பொம்மையை எரிக்காமல் பொலிஸாரால் தடுக்கப்பட்டது. பின்னர் மாணவர்களுடன் கலந்துரையாடிய பொலிஸார் அவர்கள் அமைதியான முறையில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதற்கு இடமளித்திருந்தனர். (த-இ)

# கோப்பாய் சிகிச்சை நிலையத்தில் உள்ளவர்களுக்கு அச்சம் வேண்டாம்

## போதனா மருத்துவமனை பதில் பணிப்பாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 22

கோப்பாய் கல்வியியல் கல்லூரியில் இயங்கும் சிகிச்சை நிலையத்தில் தங்கியுள்ள இந்தியர்கள் தொடர்பில் அச்சம் கொள்ளத் தேவையில்லை என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பதில் பணிப்பாளர் மருத்துவர் எஸ்.சிறிபவானந்தராஜா தெரிவித்தார்.
இந்தியாவில் திரிபடைந்த கொரோனா வைரஸ் இலங்கையிலும் இனங் காணப்பட்ட நிலையில் கோப்பாயில் அனுமதிக்கப்பட்டுள்ள இந்தியர்கள் தொடர்பில் அவரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.
கொழும்பு புறநகர்ப் பகுதி ஒன்றில் கொரோனாத் தொற்று இனங் காணப்பட்ட இந்தியர்கள் கோப்பாய் சிகிச்சை நிலையத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளார்கள்.
அவர்கள் இரண்டு வருடங்களுக்கும் மேலாக இலங்கையில் தங்கிநின்று தொழில்புரிகின்றனர் என்று கொழும்பிலிருந்து எமக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.
ஆகவே கோப்பாயில் சிகிச்சைபெறும் கொரோனா நோயாளிகள் அச்சம்கொள்ளத் தேவையில்லை. - என்று மேலும் தெரிவித்தார். (த-20)


## கண்ணீர் அஞ்சலி



எமது அலுவலகத்தின் களஞ்சிய காப்பாளர்
**திரு. சித்திரவேல் கிருஷ்ணானந்**
அவர்களின் அன்புத் தாயார்
**திருமதி சித்திரவேல் பவளராணி**

அவர்களின் பிரிவுச் செய்தி கேட்டு மிகுந்த மனவேதனை அடைகின்றோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன், அவரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பிரதம மின்பொறியியலாளர்,**
**மின் பொறியியலாளர் (பராமரிப்பு),**
**உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள்**
**யாழ் பிரதேச அலுவலகம்**
**இலங்கை மின்சார சபை, சுன்னாகம்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைத்துக் கல்வி வலயங்களிலும் இணையவழி கல்வி மத்திய நிலையம்

## கல்வி அமைச்சர் தெரிவிப்பு



**கொழும்பு, ஜுன் 22**

**தொலைநோக்கு முறைமை ஊடாக கற்றல் நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாத மாணவர்களின் நலனைக் கருத்திற்கொண்டு அனைத்து கல்வி வலயங்களிலும் இணையவழி கல்வி மத்திய நிலையங்களை நிறுவத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கான ஆலோசனை வலய கல்வி பணிப்பாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இரண்டு வார காலத்துக்குள் இணைய வழி கற்றல் மத்திய நிலையங்கள் நிறுவப்படும்**

இவ்வாறு கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

சுகாதார அறிவுறுத்தல்களுக்கு அமைய இந்த மத்திய நிலையம் செயற்படும். கிழமையில் 5 நாள்களும் காலை 7.30 மணி தொடக்கம் மாலை 3.30 மணி வரை இந்த இணைய வழி கற்றல் மத்திய நிலையத்தில் கற்பிக்கப்படும்.

கல்வி வலயங்களை மையப்படுத்தி உருவாக்கப்படும் இந்த இணையவழி மத்திய நிலையத்துக்கு தேவையான கற்றல் உபகரணங்கள் கல்வி அமைச்சின் ஊடாக வழங்கப்படும். ஒரு மத்திய நிலையத்துக்கு குறைந்தபட்சம் 10 மடிக் கணினிகள் வழங்கப்படும்.

கொவிட்19 வைரஸ் தாக்கத்தின் காரணமாக கல்வித்துறைக்கு பெரும் சவால் ஏற்பட்டுள்ளது. இப்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் பாடசாலைகளை எப்போது மீளத் திறக்க முடியும் என்பதை குறிப்பிட முடியாது.

இணையவழி முறைமை ஊடாக மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகள் இப்போது முன்னெடுக்கப்படுகின்றன. தொலைநோக்கு கல்வி முறைமை ஊடாக மாணவர்கள் முழுமையான கற்றல் பயனை பெற முடியாது. இப்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் இணைய வழி கல்வி முறைமையைவிட பிறிதொரு வழிமுறை ஏதும் கிடையாது.

இணையவழிக் கல்வி முறைமை மற்றும் குரு கெதர ஆகிய செயற்றிட்டங்கள் ஊடாக மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

கல்வி அமைச்சின் உத்தியோகப்பூர்வ வலைதளத்தில் இணையவழி கற்றல் முறைமையில் முதலாம் தரம் தொடக்கம் உயர்தர மாணவர்களுக்கு அவசியமான பாடத்திட்டங்கள். தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. கல்வி அமைச்சின் வலைத்தளத்தில் உள்ள பாடத்திட்டங்களை கற்பதற்கு எவ்வித கட்டணமும் அறவிடப்படமாட்டாது.

**65,000 பாடத்திட்டங்கள்**

கல்வி அமைச்சின் உத்தியோகபூர்வ வலைத்தளத்தில் சுமார் 65 ஆயிரம் பாடத்திட்டங்கள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

கடந்த மாதம் மாத்திரம் சுமார் இரண்டரை லட்சம் மாணவர்கள் இதனால் பயனடைந்துள்ளார்கள்.

குருகெதர செயற்றிட்டம் ஊடாக கற்றல் நிகழ்ச்சிகள் 'ஐ' தொலைக்காட்சி அலைவரிசையிலும், 'நேத்ரா' அலைவரிசையிலும் ஒளிப்பரப்பாகின்றன. தரம் 3 தொடக்கம் உயர்தர மாணவர்களுக்கு தேவையான கற்றல் நிகழ்ச்சிகள் இவ்வாறு ஒளிப்பரப்பாகின்றன.

2020 ஆம் ஆண்டுக்கான சாதாரண தர பரீட்சையின் பெறுபேற்றை வெகு விரைவில் வெளியிட எதிர்பார்த்துள்ளோம். தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் பாடசாலைகளை திறக்கும் திகதியை உறுதியாக குறிப்பிட முடியாது-என்றார். (த-இ)

## தவறான முடிவெடுத்து சிறுமி உயிர்மாய்ப்பு

யாழ்ப்பாணம், ஜுன் 22

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தொல்புரம் பகுதியில் வசித்து வந்த சிறுமி ஒருவர் தவறான முடிவெடுத்து உயிர்மாய்த்துள்ளார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

சத்தியானந்தன் சுதர்சினி (வயது 17) என்பவரே உயிரிழந்தார். வட்டுக்கோட்டை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த-27)

## பெண் சாவு தொடர்பில் இருவர் நேற்றுக் கைது

கிளிநொச்சி, ஜுன் 22

கிளிநொச்சி மாவட்டம் அம்பாள் குளத்திலிருந்து சடலமாக மீட்கப்பட்டிருந்த உருத்திரபுரம் பகுதியைச் சேர்ந்த பெண்ணின் கொலையுடன் தொடர்புடைய சந்தேகத்தில் இருவர் கிளிநொச்சிப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

காமராஜ் திலகேஸ்வரி (வயது - 37) என்பவரே கடந்த மார்ச் மாதம் ஒன்பதாம் திகதி சடலமாக மீட்கப்பட்டிருந்தார். அவருக்கு 03 வயதில் ஒரு குழந்தை உள்ளது என்று முதற்கட்ட விசாரணையில் தெரிய வந்திருந்தது.

இருந்தபோதிலும் குறித்த பெண் எவ்வாறு கொலை செய்யப்பட்டார், யாரால் கொலைசெய்யப்பட்டார் போன்ற விவரங்கள் தெரியவந்திருக்கவில்லை. கிளிநொச்சிப் பொலிஸார் தொடர்ந்து மேற்கொண்ட விசாரணையில் குறித்த பெண்ணின் இறப்பு தொடர்பில் கிளிநொச்சி முறிப்பு பகுதியைச் சேர்ந்த இருவர் கிளிநொச்சி பொலிஸாரால் சந்தேகத்தின் அடிப்படையில் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

ஒருவர் 1980ஆம் ஆண்டு பிறந்தவர் என்றும் மற்றையவர் 1997 ஆம் ஆண்டு பிறந்தவர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில் அவர்கள் இருவரும் நாளை கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்தப்படுவார்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (த-6)



## நாட்டில் நேற்று 2,098 தொற்று

கொழும்பு, ஜுன் 22

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 2 ஆயிரத்து 98 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 2 லட்சத்து 41 ஆயிரத்து 820 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன், கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் ஆயிரத்து 898 பேர் நேற்று குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

அதன்படி, நாட்டில் கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 லட்சத்து 7 ஆயிரத்து 287 ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்றுக் காரணமாக மருத்துவமனைகள் மற்றும் தனிமைப்படுத்தல் மையங்கள் என்பவற்றில் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை 31 ஆயிரத்து 900 ஆக அதிகரித்துள்ளது எனவும் சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது. (த-22)

**முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்...**

### கஞ்சா விற்பனை...

றச்சாட்டில் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் அந்த மூவரையும் கைதுசெய்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வீதியில் சந்தேகத்துக்கிடமாகச் சென்ற மோட்டார் சைக்கிளை வழிமறித்து சோதனையிட்டபோதே, கஞ்சா சிறுசிறு பொதிகளாக்கப்பட்டிருந்தமை கண்டறியப்பட்டது. அவர்கள் குறித்த கஞ்சாப் பொதிகளை நடமாடும் வியாபாரமாகக் கொண்டு சென்று விற்பனையில் ஈடுபட்டிருந்தனர் என்பது விசாரணையில் தெரியவந்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. கைதுசெய்யப்பட்ட மூவரும் சட்ட நடவடிக்கைக்காக யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (த-20)

### 90 மதுபான...

பானப் போத்தல்களை உடைமையில் வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் வெவ்வேறு இடங்களில் 5 பேர் கைதுசெய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அந்த ஐவரிடமிருந்தும் யாழ்ப்பாணம் மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர், 90 மதுபானப் போத்தல்களைக் கைப்பற்றியுள்ளனர்.

மே 21ஆம் திகதி நாட்டில் பயணத்தடை நடைமுறைக்கு வந்ததிலிருந்து சுமார் ஒரு மாதத்தின் பின்னர் மதுபானசாலைகள் நேற்றுத் திறக்கப்பட்டன.

இதன்போதே, 10 மதுபானப் போத்தல்களுக்கு மேல் கொள்வனவு செய்து எடுத்துச்சென்றோர் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அதன்படி, யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவில் மூவரும், கோப்பாய் பொலிஸ் பிரிவில் ஒருவரும், சுன்னாகம் பொலிஸ் பிரிவில் ஒருவரும் கைதுசெய்யப்பட்டனர்.

சந்தேகநபர்கள் நீதிமன்ற நடவடிக்கைகளுக்காக. அந்தந்த பிரிவுக்குரிய பொலிஸ் நிலையங்களில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த-26.20)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 66ஆவது பிறந்த நாளும் 31ஆம் நாள் நினைவஞ்சலியும்

தோற்றம் 22 . 06 . 1955



மறைவு 21 . 05 . 2021

## அமரர் சொக்கலிங்கம் புஸ்பராஜா (றஜனா)

பிறந்த இடம் - நாரந்தனை
வசிப்பிடம் - பிரான்ஸ்

அன்பிற்கும் பணபிற்கும் பாசத்திற்கும் அடைக்கலமாய் விளங்கிய அமரர் சொக்கலிங்கம் புஸ்பராஜா (றஜனா) அவரின் பிரிவால் தவிக்கும் அம்மா, மனைவி, மக்கள், மருமக்கள், பெறாமக்கள், சகோதரர்கள், உடன்பிறவா சகோதரர்கள், மைத்துனர்கள், மாமி, அன்ரிமார்கள், உறவினர்கள் அனைவரினதும் மனம் உங்கள் பிரிவால் அலைமோதி அழுகின்றது. வேலைக்கு சென்றுகொண்டிருக்கும் வேளையில் பின்னவன் கூற்றவன் நின்றானோ! உங்கள் திடீர் மறைவு எல்லோரையும் சோகத்தில் ஆழ்த்திவிட்டது. விதி யாரைத்தான் விட்டது. உங்கள் புன் சிரிப்பு நீங்கள் பாடுகின்ற பஜனை ஒலியும் காதில் ஒலிக்கின்றது. அப்பா உங்கள் ஓசையை எப்போ அப்பா கேட்கப் போகின்றோம் உங்கள் ஆத்மா சாந்தி அடைய 66 ஆவது பிறந்தநாள் அன்று 31வது நினைவு நாளில் இறைவனைப் பிரார்த்தித்து அஞ்சலியை செலுத்துகின்றோம்.

அன்பே சிவம்
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

82/22, செட்டித்தெரு, நல்லூர். குடும்பத்தினர்.

# 1ம் ஆண்டு நினைவஞ்சலி

18 . 03 . 1946



03 . 07 . 2020

எமது அன்புத்தெய்வம்

## அமரர் கந்தையா கனகசபை

( ஓய்வுபெற்ற வங்கி முகாமையாளர் - இலங்கை வங்கி )

திதி : 22.06.2021 ( செவ்வாய்க்கிழமை )

மீளாத்துயில் கொண்டு ஓராண்டு கடந்தாலும்
மீளவில்லை எம் மனது
தீராத்துயரில் தவிக்கின்றோம் நாம் இங்கு
சீராட்டி பாராட்டி பாசமாய் வளர்த்தீரே பாதி வழிதனில் எம்மை
பரிதவிக்க விட்டு விட்டுச் சென்றதென்ன, குடும்பத்தின் ஆணிவேராய்
சமூகத்தின் சேவகனாய் வழிகாட்டி வாழ்ந்தவரே
வரும் துன்பம் களைந்தவரே உங்கள் புன்னகை பூத்த முகம்
உதிர்கின்ற வார்த்தை தேன் துளிகள் என்றென்றும் எம் நெஞ்சமதில்
நீங்காத நினைவுகளாய் நிறைந்து நிற்கும் நிலைத்து நிற்கும்
நிஜமான நீங்கள் நிழலாகிப்போனாலும்
நேரான உங்கள் வழித்தடம்பற்றி
வாழ்ந்திடுவோம் இன்னும் ஆண்டாண்டுகாலம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

உங்கள் பிரிவால் வாடும் குடும்பத்தினர்

ஓம் விராட் விஸ்வ பிரம்மனே நமக

# மரண அறிவித்தல்



## சித்திரவேல் பவளராணி

வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் மானஸ் பாடசாலை வீதி உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சித்திரவேல் பவளராணி நேற்று (21.06.2021) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் கிருஸ்ணசாமி இந்திராணி தம்பதியரின் அன்பு மகளும், சாந்தலிங்கம் (பத்தர்) பூரணம் தம்பதியரின் அன்பு மருமகளும், அமரர் சித்திரவேலின் (இ.மி.சபை) அன்பு மனைவியும், கிருஸ்ணானந்தின் (இ.மி.சபை SK) அன்புத் தாயாரும், பிரணிகா, தஸ்வின் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அமரர்களான கந்தசாமி, குணசிங்கம், வெற்றி வேலாயுதம், புஸ்பராணி ஆகியோரின் சகோதரியும், அமரர்களான இராஜலட்சுமி, யோகரத்தினம், ஜெகசோதிமலர் மற்றும் மகேஸ்வரி, தங்கராசா (பத்தர்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.06.2021) செவ்வாய்க் கிழமை மு.ப. 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மானஸ் பாடசாலை வீதி,
டச் றோட், உடுவில்.

தகவல்:
மகன் - கிருஸ்ணா

# மரண அறிவித்தல்

மண்ணில் 12 . 07 . 1932



விண்ணில் 21 . 06 . 2021

## திருமதி வைரமுத்து தங்கம்மா

கச்சாய் தெற்கு கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும், கச்சாய் றோட் 1 ம் கட்டை சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட வைரமுத்து தங்கம்மா அவர்கள் நேற்று (21.06.2021) திங்கட்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற ஆறுமுகம் செங்கமலம் தம்புதியரின் மருமகளும், காலஞ்சென்ற வைரமுத்துவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான செங்கமலம், சிதம்பரப்பிள்ளை ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற இராமச்சந்திரன் மற்றும் இன்பேஸ்வரி (சுவிஸ்), இராஜ மனோகரன் (பிரான்ஸ்), இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும், தேவமலர், யோகேஸ்வரன் (சுவிஸ்), யோகராணி (பிரான்ஸ்), முருகானந்தன் (மரக்கறி வாணிபம் - சாவகச் சேரி) ஆகியோரின் அன்பு மாமியாரும், இரஞ்சினி, ரஜனி, மயூரதி காலஞ்சென்ற சிவகரன் மற்றும் நடேஸ்வரி, தமிழ்ச்செல்வி, முகுந்தன், ஜெனநதன், வசந்த ரூபன் (பொறியியலாளர்-சிங்கப்பூர்), வாசுகி சுலோசனா, மோகன்ராஜ் ஆகி யோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.06.2021) செவ்வாய்க்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கச்சாய் எறியால்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

1ம் கட்டை, கச்சாய் வீதி,
சாவகச்சேரி.
077 9015 762

தகவல்: மருமகன்
க.முருகானந்தன்
மரக்கறி வாணிபம்,
சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில் 05 . 01 . 1928

விண்ணில் 22 . 05 . 2021



## திருமதி சரஸ்வதி சீவரட்ணம்

உரும்பிராய் தெற்கை பிறப்பிடமாகவும் கனடா Toronto வை வதிவிடமாகவும் கொண்ட சரஸ்வதி சீவரட்ணம் அவர்கள் கடந்த 22.05.2021 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பிரபல வர்த்தகர் முத்துக்குமாரு நாகம்மா தம்பதியினரின் மூத்த மகளும், காலஞ்சென்ற பிரபல வர்த்தகர் சீவரட்ணம் அவர்களின் அன்பு மனைவியும் ஆவார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைந்து பர்வதவர்த்தினி அம்மன் பாதம் சென்றடைய பிரார்த்திப்பதோடு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத் தினருக்கும் எமது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கின்றோம்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

சிவகுல வீதி,
முத்துக்குமாரு ஒழுங்கை,
உரும்பிராய் தெற்கு.

தகவல் : ப. இராசதுரை,
சகோதரி புவனேஸ்வரியின் கணவர்
நா.ஜெய்கரன் - பேரன்
077 684 5510


## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்...

### கடலுணவுகளின்...

கடற்றொழிலாளர்கள் குற்றம்சாட்டுகின்றனர்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில்,

தம்பாட்டி கடற்றொழிலாளர்கள் சார்பில் சிவநேசபிள்ளை சிவச்செல்வன், சந்திரன் ரவிவர்மன் ஆகியோர் இதனைத் தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

நாங்கள் எங்களுடைய சுயவிருப்பின் பேரில் கடலுணவுகளை உள்ளூர் வியாபாரிகளுக்கு விற்பனை செய்து வந்தோம். உள்ளூர் வியாபாரிகள் கொழும்புக்கு அதனை விற்பனை செய்து வந்தனர். இடையில் ஏற்பட்ட அரசியல் சார்ந்த கருத்து முரண்பாடுகளால் அது கைவிடப்பட்டது.

கடற்றொழிலாளிகளிடம் நேரடியாக கடலுணவுகளை வாங்குவதை நிறுத்த வேண்டும் என்று கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூறியுள்ளார். தம்பாட்டி கிராமிய கடற்றொழிலாளர் சங்கத்தின் பிரதிநிதிகளுக்கும், தம்பாட்டி கடற்றொழிலாளர்களிடம் கடலுணவுகளை கொள்வனவுசெய்யும் வர்த்தகர்களுக்கும் இடையிலான கலந்துரையாடல், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் ஊர்காவற்றுறை பிரதேச செயலக மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றிருந்தது. அதில், மேற்கண்ட தடையை டக்ளஸ் தேவானந்தா விடுத்திருந்தார். அதனால் எங்களிடம் கடலுணவுகளை கொள்வனவு செய்வதற்கு வியாபாரிகள் முன்வருவதில்லை. அவர்கள் தற்போது அச்சுறுத்தப்பட்டுள்ளனர்.

**கட்சி சார்ந்து இயங்குகிறது கடற்றொழிலாளர் சங்கம்**

கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் எங்களுடையதுதான். ஆனால் அது கட்சி சார்ந்து இயங்குகிறது. கட்சி சார்ந்தவர்களின் ஒருசிலரை வைத்து முடிவு எட்டப்பட்டுள்ளது.

எங்களுடைய கடலுணவை விற்பதற்கு கட்சி சார்ந்து அமைச்சர் தலையிடுவதை நாம் விரும்பவில்லை. அதனை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். கூட்டுறவுச் சங்கம் என்பது பொதுவானதோர் அமைப்பு. பொதுச்சபை எடுக்கும் முடிவையே செயற்படுத்த வேண்டும். ஆனால் கூட்டுறவுச் சங்கத்திலுள்ள கட்சி சார்ந்த நபர்கள், கட்சி சார்ந்த, கட்சி சொல்வதைக்கேட்டு செயற்படுகின்றார்கள். எனவே, நாங்கள் சுயமாக எங்களுடைய கடல் உணவு உற்பத்திப் பொருள்களை விற்பனைசெய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோருகின்றோம். - என்று தெரிவித்தனர். (த-20)

### மணலுடன்...

தெரிவித்தனர்.

கிளிநொச்சி புளியம்பொக்கணை நாகேந்திரபுரம் பகுதியில் சட்டவிரோதமாக மணல் ஏற்றிச்சென்ற டிப்பர் ரக வாகனம்மீது படையினர் நேற்று அதிகாலை சுமார் 4 மணியளவில் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். அதன்போது, வாகனத்தின் கண்ணாடி உடைந்து ஒருவர் காயமடைந்தார். அவர் தருமபுரம் பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சட்டவிரோத மணல் அகழ்வை கட்டுப்படுத்துவதற்காக அமைக்கப்பட்டிருந்த சோதனைச்சாவடி ஊடாக மணல் ஏற்றியபடி சென்ற வாகனத்தை நிறுத்துமாறு படையினர் தெரிவித்தனர் என்றும், அதனையும் மீறி வாகனம் நிற்காமல் சென்றதால் அதை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது என்றும் படையினர் தெரிவித்துள்ளனர்.

எனினும், மணல் ஏற்றுவதற்கான அனுமதியுடனேயே மணல் ஏற்றிச் சென்றேன் என்று அதன் சாரதியான காயமடைந்த நபர் தெரிவித்தார். தர்மபுரம் பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (த-214,113)


**வீடு வாடகைக்கு**

5 அறைகள் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.

2 1/2 கலாசாலை வீதி, திருநெல்வேலி 076 998 0837

**நாஹா மருத்துவ நிலையம்**

- பாரிச வாதத்தினால் வரும் கை, கால் செயலிழப்புக்கு உடனடி நிவாரண மருந்தியல்.
- அல்சர், தீராத சொறி கொண்ட புண்கள், மூட்டு வாதம், பிறசர் **சிறப்பு சிகிச்சை.**

வங்கி முன்லேன், சாந்தாவத்தை வயிரவர் கோயிலடி (ஜெகபதி வீடு), மானிப்பாய். 077 321 2740


## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, முல்லைத்தீவு

## பெறுகைக்கான அழைப்பு
## மருத்துவ உபகரணப் பொருட்கள் மற்றும் மின்பிறப்பாக்கி வழங்கல் - 2021

பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பிராந்திய பெறுகைகள் குழுத்தலைவர் தகுதியான தகைமை வாய்ந்த மருத்துவ உபகரண பொருட்கள் மற்றும் மின்பிறப்பாக்கி விநியோகஸ்தர்களிடமிருந்து கீழ்வரும் பொருட்களிற்கான முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை கோருகின்றேன்.

| Reference No | Description | Qty | Bid Security | Reference No | Description | Qty | Bid Security |
|---|---|---|---|---|---|---|---|
| L.Min/MEP/2021/01 | Autoclave Machine | 4 | 5,500.00 | L.Min/MEP/2021/03 | Hematology Analyzer | 1 | 25,000.00 |
| | | | | L.Min/MEP/2021/04 | Ultrasound Scanner | 1 | 100,000.00 |
| | Sterilizer | 6 | | L.Min/MEP/2021/05 | Automatic Biochemistry Analyzer | 1 | 30,000.00 |
| L.Min/MEP/2021/02 | BP Apparatus-Aneroid | 14 | 50,000.00 | L.Min/MEP/2021/06 | Ice line Fridge | 3 | 150,000.00 |
| | BP Apparatus Digital | 6 | | | Medicine Trolley | 16 | |
| | Thermometer-Digital | 17 | | | Portable Pulse Oximeter-Finger | 3 | |
| | Stethoscope | 12 | | | Bathroom Scale | 4 | |
| | Multipara Monitor (Basic) | 2 | | | Exercise ECG with Treadmill | 1 | |
| | ECG Machine | 5 | | | Nebulizer | 4 | |
| | Auroscope | 2 | | | Snellen Chart | 6 | |
| | Hand Held Doppler | 3 | | | Holter Monitoring System | 1 | |
| | Height Board | 3 | | | Spring Balance | 12 | |
| PSSP/MEP/2021/01/04 | Oxygen Regulator | 4 | 4,000.00 | PSDG/MEP/2021/03 | Oxygen Regulator | 2 | 2,000.00 |

**Generator**

| Reference No | Description | Qty | Bid Security |
|---|---|---|---|
| L.Min/MEP/2021/07 | 20KVA Generator | 3 | 30,000.00 |

- விலைக்கேள்விதாரர் மருத்துவ உபகரண பொருட்கள் விநியோகம் தொடர்பில் வியாபார பெயர் பதிவினையுடைய ஒரு நபராக அல்லது நிறுவனமாக இருத்தல் வேண்டும்.
- ஒவ்வொரு பெறுகைக்கும் மேலே சொல்லப்பட்ட பொருத்தமான உத்தரவாத முறி (Bid Security) இணைக்கப்படுதல் வேண்டும். உத்தரவாத முறி இணைக்கப்படாத பெறுகைகள் நிராகரிக்கப்படும்.
- நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் இப் பணிமனையில் கிடைக்கும் "Application for Bid documents" என்ற படிவத்தினை பூர்த்திசெய்து மேற்காட்டிய ஒவ்வொரு பெறுகைக்கும் மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணமாக **ரூபா 2000/=** காசாக செலுத்தி ஆங்கில மொழியிலான பெறுகைப் பத்திரங்களை அலுவலக நாட்களில் **22.06.2021** தொடக்கம் **13.07.2021** வரையான காலப் பகுதியில் **09.00** மணி தொடக்கம் **15.00** மணிவரை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.
- விலைக்கேள்விகள் **14.07.2021** அந் திகதி **10.30** மணிக்கு முன்பதாக பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, முல்லைத்தீவு நிதிக்கிளை அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். இவ்விலைக் கேள்விகள் **14.07.2021** அந் திகதி **10.30** மணிக்கு எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
- தகுதி வாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் மேலதிக தகவல்களை அலுவலக நேரங்களில் ( T.P: 021 229 0111 , Fax : 021 2290 104 ) பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம் முல்லைத்தீவிலிருந்து பெற்றுக்கொள்ளமுடியும்.
- கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியில் ஒரு பகுதியினை மட்டும் ஏற்றுக் கொள்ளவதற்கு இப் பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைக் கேள்வியாளர்களுக்கான பொறுப்புக்கள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்து செய்வதற்கு பெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.

தலைவர்,
பிராந்திய பெறுகைகள் குழு,
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை
முல்லைத்தீவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுநீரகம் உடன் தேவை

0 + சிறுநீரகம் உடன் தேவை வழங்க விரும்புபவர்கள் உடன் தொடர்புகொள்ளவும்

076 018 3700/ 077 468 5553


# கட்சி தாவுகின்றார் ஜோன் அமரதுங்க?

கொழும்பு, ஜுன் 22

எதிர்க்கட்சித் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ உள்ளிட்டோர் தம்முடன் இணையும்படி பல தடவைகள் எனக்கு அழைப்பு விடுத்தனர். அதனை நான் நிராகரிக்கவில்லை. அழைப்பை நிராகரிப்பதற்கு எனக்கு எந்தக் காரணமும் இருக்கவில்லை.

அது குறித்து எதிர்காலத்தில் தீர்மானம் மேற்கொள்வேன் இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களில் ஒருவரான ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் எந்தவொரு செயற்பாட்டிலும் நான் இனி பங்கேற்பதில்லை. அனைத்துவித கடமைகள், பொறுப்புக்களில் இருந்தும் விலகி சுதந்திரமாக வாழ்க்கையை வாழத் தீர்மானித்துள்ளேன்.

வழங்கப்பட்ட வாக்குறுதி மற்றும் இணக்கப்பாட்டுக்கு அமைவாக ரணில் விக்ரமசிங்க தேசியப்பட்டியல் பதவியை எனக்கு அளிப்பேன் எனக் கூறியி ருந்தார். எனினும் அது நடக்கவில்லை. தோல்வியடைந்த ஒருவரை தேசியப்பட்டியல் ஊடாக நாடாளுமன்றுக்கு அனுப்பும் தீர்மானத்தை அந்தக் கட்சி சற்று பரிசீலித்திருக்க வேண்டும்.

நான் ஒருபோதும் தேர்தலில் தோல்வியடையவில்லை. 2020ஆம் ஆண்டு நடந்த பொதுத்தேர்தலில் போட்டியிடாமல் தேசியப்பட்டியல் ஊடாக வருவதற்கு நான் எடுத்த தீர்மானம், அந்தக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் கட்சியின் கோரிக்கைக்கு அமைவானதாகும்.

தோல்வியடைந்த ஒருவரை தேசியப் பட்டியல் உறுப்பினராக நியமிக்கும் கலாசாரம் ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்ததில்லை - என்றார். (எ-4)


## கேள்வி அறிவித்தல்
## வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்
## சபைநிதி 2021

01 தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம் அவர்களினால் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்விகள் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறான வேலைகளுக்காகக் கோரப்படுகின்றது.

02 தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாக கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட03/2020(i)ஆம் இலக்க 11.01.2021ஆந் திகதிய,04/2016(ii)ஆம் இலக்க 08.05.2019ஆந் திகதிய மற்றும் 04/2016(iii)ஆம் இலக்க 18.02.2021ஆந் திகதிய பொதுநிதிச் சுற்றறிக்கைகளுக்கு அமைவாக வடமாகாணத்தை சார்ந்தவருக்கும் மற்றும் வேண்டப்படும் உரியதரத்தை கொண்டிருப்போருக்கும் முன்னுரிமையளிக்கப்படும்.

03 இல 1-10வரையான கேள்விகளுக்கு கேள்விபெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும்,அட்டவணையிற் காட்டியபடி வீதி மற்றும் கட்டடம் புனரமைப்புக்கு பொருத்தமான தரத்தில் நிர்மாணதொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும். இல 11 கேள்விகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனதாரராகக் காணப்பட வேண்டும்.

04 தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவுஅட்டவணை (Schedule) பகுதி 5இல் காட்டப்பட்டுள்ளது.

05 ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் வலிகாமம் தெற்கு பிரதேசசபை தலைமையலுவலகத்தில் (தொலைபேசி 0212240017) இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் **22.06.2021**தொடக்கம் **05.07.2021**ஆம் திகதி வரை வேலை நாட்களில் மு.ப 9.00 மணிமுதல் 15.00 மணிவரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

06 ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் வலிகாமம் தெற்கு பிரதேசசபை சுன்னாகம் எனும் இடத்திலிருந்து **22.06.2021**திகதியிலிருந்து **05.07.2021**ம் திகதி வரை காலை 09.00 மணிக்கும் பி.ப 15.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.3000/- (வரிநீங்கலாக) இனை செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.

07 பெறுகை ஆவணங்களினை இரு பிரதிகளில் தயாரித்து தனித்தனியாக இரு உறைகளில் இட்டு **06.07.2021**ம் திகதி மு.ப 9.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியவாறு தவிசாளர், பிரதேசசபை பெறுகைக்குழு, வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம் எனும் முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்வி நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்தவுடன் வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

08 கிடைக்கப்பெற்ற கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக் கேள்வியின் ஒருபகுதியினை மட்டும் ஏற்றுக் கொள்வதற்கு அல்லது இப்பெறுகையை முழுமையாக இரத்துச் செய்வதற்கு பெறுகைக் குழுவிற்கு அதிகாரமுண்டு.

09 கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| இல | வேலை விபரம் ஒப்பந்த இலக்கம் | மதிப் பீட்டுத் தொகை (Mn) | ஒப்பந்த காலம் | வேண்டப் படும் தரம் | கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியில் இருந்து கேள்வி செல்லுடியாகும்காலம் | | வேண்டப்படும் கேள்விப்பிணை | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | செல்லுடியாகும் நாட்கள் | திகதி | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| 1 | கலாநிதி 5ம் குறுக்கு வீதி– ஏழாலை வடக்கு, இலங்கையர்கோன் குறுக்கு வீதி உப ஒழுங்கை மற்றும் உப தபாலக அருகாமை வீதி NP/14/41(15)/02/05/CF/2021/12 | 1.023 | 60. நாட்கள் | C9& C8 வீதிப் புனரமைப்பு | 63 நாட்கள் | 07.09.2021 | 10,500.00 | 05.10.2021 |
| 2 | சொக்கவளவு பிள்ளையார் பின் வீதி புனரமைப்பு– குப்பிளான், திடற்புலம் 4ம் குறுக்கு வீதி ஈவினை, உயிலடி 1ம் குறுக்குவீதி–ஏழாலை தெற்கு NP/14/41(15)/02/05/CF/2021/13 | 1.987 | 60 நாட்கள் | C9& C8 வீதிப் புனரமைப்பு | 63 நாட்கள் | 07.09.2021 | 20,000.00 | 05.10.2021 |
| 3 | விளிசிட்டி சூராவத்தை 2ம் குறுக்கு வீதி-ஏழாலை தம்பிமுத்துவாத்தியார் 1ம் குறுக்கு வீதி – சுன்னாகம், சித்தியார்வளவு வீதி NP/14/41(15)/02/05/CF/2021/14 | 2.082 | 90 நாட்கள் | C8& C7 வீதிப் புனரமைப்பு | 77 நாட்கள் | 21.09.2021 | 21,000.00 | 19.10.2021 |
| 4 | அந்திரான் 1ம், 2ம் கிளைவீதி –சங்குவேலி NP/14/41(15)/02/05/CF/2021/15 | 0.718 | 60 நாட்கள் | C9& C8 வீதிப் புனரமைப்பு | 63 நாட்கள் | 07.09.2021 | 7,500.00 | 05.10.2021 |
| 5 | ஆர்க் குறுக்கு ஒழுங்கை–உடுவில், கதிரமலை சிவன் கோவில் முன்வீதி – சுன்னாகம் நகர்தெற்கு NP/14/41(15)/02/05/CF/2021/16 | 1.921 | 60 நாட்கள் | C9& C8 வீதிப் புனரமைப்பு | 63 நாட்கள் | 07.09.2021 | 19,500.00 | 05.10.2021 |
| 6 | இணுவில் மஞ்சத்தடி வீதி, பரராஜ சேகரப்பிள்ளையார் கிளை வீதி இணுவில் தென்மேற்கு NP/14/41(15)/02/05/CF/2021/17 | 0.689 | 60 நாட்கள் | C9& C8 வீதிப் புனரமைப்பு | 63 நாட்கள் | 07.09.2021 | 7,000.00 | 05.10.2021 |
| 7 | கற்பகபிள்ளையார்கோவில் வீதி – உடுவில் தென்கிழக்கு, பரியோலை 1ம், 2ம் ஒழுங்கை – உடுவில் NP/14/41(15)/02/05/CF/2021/18 | 1.295 | 60 நாட்கள் | C9& C8 வீதிப் புனரமைப்பு | 63 நாட்கள் | 07.09.2021 | 13,000.00 | 05.10.2021 |
| 8 | முதலிகோவில் வீதி/தேவாலய வீதி–தாவடி கிழக்கு, தாவடி இ.த.க பாடசாலை 1ம் உப வீதி NP/14/41(15)/02/05/CF/2021/19 | 1.188 | 60 நாட்கள் | C9& C8 வீதிப் புனரமைப்பு | 63 நாட்கள் | 07.09.2021 | 12,000.00 | 05.10.2021 |
| 9 | சுன்னாகம் உப அலுவலகம், மீன் சந்தை, மரக்கறிச்சந்தை மலசலகூடத்திருத்தம் NP/14/41(15)/02/05/CF/2021/20 | 2.211 | 90 நாட்கள் | C8 & C7 கட்டடப் புனரமைப்பு | 77 நாட்கள் | 21.09.2021 | 22500.00 | 19.10.2021 |
| 10 | மருதனார் மடம் மரக்கறிச் சந்தையினுள் கீரைக்கடை அமைத்தல் NP/14/41(15)/02/05/CF/2021/21 | 0.775 | 60 நாட்கள் | C9& C8 கட்டடப் புனரமைப்பு | 63 நாட்கள் | 07.09.2021 | 8,000.00 | 05.10.2021 |
| 11 | Supply and Installation Of IP Based CCTV Surveillance System 2021 NP/14/41(15)/03/CCTV Surveillance System -2021 | 4.536 | 60 நாட்கள் | அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் | 77 நாட்கள் | 21.09.2021 | 44000.00 | 19.10.2021 |

11. கேள்விதொடர்பானமுதற் கூட்டம் வலிகாமம் தெற்குபிரதேசசபைதலைமைஅலுவலகத்தில் 29.06.2021ம் திகதியன்றுமு.ப 10.00 மணிக்குநடைபெறும்.

க.தர்ஷன்,
தலைவர் ,பிரதேசசபை பெறுகைக்குழு
வலிகாமம் தெற்குபிரதேசசபை - சுன்னாகம்.
22.06.2021


# சிலாபம் கடற்கரையில் 23கிலோ கஞ்சா மீட்பு

கொழும்பு, ஜுன் 22

சிலாபம் கடற்கரையில் கரை ஒதுங்கிய மர்மப்பொதிகளுக்குள், 23 கிலோக்கிராமுக்கு மேற்பட்ட கஞ்சா போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது. இந்தப்பொதிகள் இந்தியாவிலிருந்து கடத்தல்காரர்களால் அனுப்பப்பட்டிருக்கலாம் என்று கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் எந்தவொரு சந்தேக நபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-4)

# காலி ஆயர் உள்ளிட்ட 10 பேருக்கு கொரோனா

கொழும்பு, ஜுன் 22

காலி மறைமாவட்ட ஆயர் உள்ளிட்ட பத்து பேருக்கு கொரோனா தொற்றியிருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

களுவேலவில் உள்ள சென் மேரி கதீட்ரல் தேவாலயத்தில் கடந்த வாரம் பத்து பேருக்கு பி.சி.ஆர் பரிசோதனை நடத்தப்பட்டது. அவர்களில் ஆயர் மற்றும் மூன்று பாதிரியார்கள், ஆறு ஊழியர்கள் ஆகியோருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ஆயர் ஹிக்கடுவவில் அமைந்துள்ள ஹொட்டலில் உள்ள ஒரு சிகிச்சை மையத்தில் சேர்க்கப்பட்டுள்ளார் ஏனையவர்கள் அனைவரும் பூசா நிபுண மருத்துவ மையத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொற்று பரவும்...

அத்துடன், அதிகமான கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்படும் பிரதேசங்களின் மாவட்டங்கள் மற்றும் மாகாணங்களுக்கு இடையே பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்படும். குறிப்பாக கொரோனாத் தாக்கம் அதிகளவில் இருக்கும் மேல் மாகாணம் உள்ளிட்ட சில மாவட்டங்களுக்கு எதிர்வரும் நாள்களில் மேலும் பல கட்டுப்பாடுகள் விதிக்கப்படும்.

ஒரு மாத காலமாக நாட்டை முடக்கி கொரோனாத் தொற்றை ஓரளவு கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அவ்வாறு கட்டுப்படுத்திய தொற்றை மீண்டும் அதிகரிக்காத வகையில் மக்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டும். இதற்கு மக்களின் ஆதரவு அவசியமாகும். - என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (த-22)

## மற்றொரு....

குறித்த மாதிரி மரபணு, பரிசோதனைக்காக ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் ஆய்வுகூடத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என்று சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவ நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

அசாதாரண தன்மையுடையதாக இனங்காணப்பட்டுள்ள குறித்த மாதிரியில் டெல்டா வைரஸ் இனங்காணப்படலாம். அல்லது வேறொரு நிலைமாறிய வைரஸ் இனங்காணப்படலாம். எதிர்பாராத விதமாக புதியதொரு வைரஸாக இருப்பதற்கான வாய்ப்புக்களும் உள்ளன. எனவே இவ்வாறான சந்தேகத்துக்கிடமான மாதிரிகள் இனங்காணப்படும் பகுதிகள் தொடர்பில் மிகவும் இறுக்கமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொழும்பு 2 , கொம்பனி வீதியை அண்மித்த, மாதிவெல ப்ரகதிபுற பிரதேசத்தில் நபரொருவரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட மாதிரியே அசாதாரண தன்மையுடையதாகக் காணப்படுகின்றது. இவ்வாறு இனங்காணப்படும் மாதிரிகள் தொடர்பில் பரிசோதனைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகின்றன. குறித்த நபரது மாதிரியில் மாத்திரமே இவ்வாறு அசாதாரணமான நிலைமை அவதானிக்கப்பட்டுள்ளது. எனினும், ஏனைய பகுதிகளிலும் இவ்வாறான நிலைமை உள்ளதா என்பது இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை. தெமட்டகொட பிரதேசத்திலும் இவ்வாறு சந்தேகத்துக்கிடமான மாதிரிகள் இனங்காணப்பட்டமையினாலேயே, அந்தப் பகுதி கடும் கட்டுப்பாடுகளுடன் முடக்கப்பட்டது.

அந்தப் பிரதேசம் முடக்கப்பட்டு சுமார் ஒரு வாரத்தின் பின்னரே டெல்டா வைரஸ் இனங்காணப்பட்டது. அதே போன்ற நிலைமையே தற்போதும் ஏற்பட்டுள்ளது. எனவே இவ்வாறான மாதிரிகள் இனங்காணப்படும் பகுதிகள் தொடர்பில் மிகவும் இறுக்கமான நடவடிக்கைகளை முன்னெடுப்பது தவிர்க்க முடியாதது.

தெமட்டகொட டெல்டா தொற்றுடன் இனங்காணப்பட்டவர்களுக்கு எவ்வாறு தொற்று ஏற்பட்டது என்று இதுவரையில் உறுதிப்படுத்தப்படவில்லை. எனினும், அதற்கான வாய்ப்புக்கள் பல காணப்பட்டன. தற்போது சுமார் 80 நாடுகளில் இந்த டெல்டா வைரஸ் இனங்காணப்பட்டுள்ளது. இவற்றில் எந்தவொரு நாட்டிலிருந்தும் மக்கள் நாட்டுக்கு வருகைதர முடியும். இவ்வாறு வரும் நபர்கள் ஊடாக நிலைமாறிய வைரஸ் இலங்கைக்குள் வரக்கூடும். இது தவிர இந்தியாவிலிருந்து தொழில் நிமித்தம் நாட்டுக்கு வருபவர்கள் ஊடாகவும் டெல்டா வைரஸ் தொற்றியிருப்பதற்கான வாய்ப்புக்கள் உள்ளன. இந்தியாவில் கடந்த ஆண்டு நவம்பர் மாதமே இந்த வைரஸ் இனங்காணப்பட்டது. இவ்வாறானதொரு வைரஸ் இனங்காணப்பட்டு நான்கு மாதங்களின் பின்னரே இந்தியா பெரும் தொற்றுப் பரவலை எதிர்கொண்டது.

இந்தியாவில் இந்த வைரஸ் இனங்காணப்பட்ட காலப்பகுதியில் அந்த நாட்டிலிருந்து மக்கள் இலங்கைக்கு வந்து சென்றனர். எனவே எம்மால் ஸ்திரமாகக் கூற முடியாவிட்டாலும் , இவ்வாறு ஏதேனுமொரு வழியில் டெல்டா வைரஸ் நாட்டுக்குள் பிரவேசித்திருக்கக் கூடும் என்று அனுமானிக்கலாம்.

டெல்டா வைரஸ் தொற்றாளர் இதுவரையில் வேறு எந்த பிரதேசங்களிலும் இனங்காணப்படவில்லை.

ஆனால், ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்துடன் இணைந்து ஏனைய பகுதிகளில் டெல்டா பரவியுள்ளதா என்பது தொடர்பான ஆய்வுகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன- என்றார். (த-இ)

## நாட்டில்...

எலிய தெரிவித்துள்ளார்.

அவரது ருவிற்றர் பதிவில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:

தற்போதைய உண்மை நிலைவரம் என்பது மிகவும் சிக்கலானதாகும். தொற்றால் இடம்பெற்ற இறப்புகள் அதிகமெனினும், உண்மையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானோரின் எண்ணிக்கை பதிவுடன் ஒப்பிடுகையில், இறப்புகளின் பதிவானது ஓரளவுக்கு பக்கச்சார்புடனேயே முன்னெடுக்கப்படுகின்றது. இலங்கையில் தொற்றாளர்களை இனங்காண்பதற்காக மேற்கொள்ளப்படும் பரிசோதனைகளின் எண்ணிக்கை குறைவாக உள்ளமையே இதற்குக் காரணமாகும். இந்த விடயத்தை பொறுத்தவரையில் அண்மைக்காலத்தில் நாம் பல்வேறு சிக்கல்களுக்கு முகங்கொடுத்துள்ளோம். குறிப்பாக தொற்றால் ஏற்பட்ட இறப்புகளை அறிக்கையிடுவதில் சில தினங்களுக்கு முன்னர் ஏற்படுத்தப்பட்ட மாற்றுமுறையின் விளைவாக, இனி அன்றாடம் வெளியிடப்படும் இறப்புகளின் எண்ணிக்கையானது கடந்த காலங்களில் இடம்பெற்ற இறப்புகளை உள்ளடக்கியிருக்காது. அதே வேளை மிகமுக்கியமாகக் கருத்தில் கொள்ளவேண்டிய விடயம் என்னவென்றால், கொரோனா வைரஸ் தொற்றுப் பரவலுடன் தொடர்புடைய அனைத்து அளவீடுகளிலும் சிக்கல்கள் உள்ளன. கடந்தகால நிலைவரம் மற்றும் தற்போதைய போக்கு ஆகியவை தொடர்பில் மாறுபாடான அல்லது பக்கச்சார்பான தகவல்கள் காணப்படலாம். உதாரணத்துக்கு உண்மையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானோரின் எண்ணிக்கையும், தொற்றுக்குள்ளானோர் என பதிவான எண்ணிக்கையும் சுமார் 100 மடங்கு வரை வேறுபடலாம்.

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் ஏற்பட்ட பல இறப்புகள் உண்மையில் இனங்காணப்படவில்லை என்பதை உறுதியாகக் கூற முடியும். தற்போது பரவிவரும் திரிபடைந்த டெல்டா வைரஸின் தன்மைகளின் அடிப்படையாகக்கொண்டு நோக்கும்போது, நாட்டில் இப்போது பின்பற்றப்பட்டுவரும் நடைமுறைகளின்கீழ் தொற்றுப் பரவல் வீதமானது விரைவில் மிகவேகமாக அதிகரிக்கும்- என்றார். (த-இ)

## வடக்கில்...

பேருக்குத் தொற்று உறுதிசெய்யப்பட்டது. அதன்படி, கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவிலுள்ளவர்களுக்கே அதிகளவாக 18 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 5 பேருக்கும், உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 4 பேருக்கும், சண்டிலிப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 3 பேருக்கும், பருத்தித்துறை, மன்னார், முல்லைத்தீவு சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகள் மற்றும் மயிலிட்டி கொரோனா இடைத்தங்கல் மையம் என்பவற்றில் தலா 2 பேருக்கும், ஒட்டுசுட்டான் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவு, யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை, காங்கேசன்துறை கடற்படை முகாம், யாழ்ப்பாணம் சிறைச்சாலை என்பவற்றில் தலா ஒவ்வொருவருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இதேவேளை, யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நேற்றுமுன்தினம் இரவு 324 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. அவற்றில் 8 பேருக்குத் தொற்று உறுதிசெய்யப்பட்டது.

அதன்படி, இதே யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் 4 பேருக்கும், கிளிநொச்சி பொது மருத்துவமனையில் இருவருக்கும், கரைச்சி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவு, பருத்தித்துறை ஆதார மருத்துவமனை ஆகியவற்றில் தலா ஒவ்வொருவருக்கும் தொற்று உறுதிசெய்யப்பட்டது.

இதேவேளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடத்தில், நேற்று 293 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். சோதனையில் 8 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. அதன்படி, வேலணை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 4 பேருக்கும், சண்டிலிப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 3 பேருக்கும், மயிலிட்டி தனிமைப்படுத்தல் நிலையத்தில் ஒருவருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. (த-5)

## சாவு...

அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது. இவ்வாறு உயிரிழந்தவர்களில் 30 ஆண்களும், 22 பெண்களும் உள்ளடங்குகின்றனர்.

இதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி சாவடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 ஆயிரத்து 633 ஆக அதிகரித்துள்ளது என்றும் அரச தகவல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (த-22)

## வவுனியாவில்...

வெந்த புலவு பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவர் சிறுநீரக நோய் காரணமாக வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். அவரிடம் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் அவருக்கு கொவிட் தொற்று உறுதிசெய்யப்பட்டது.

அவருக்கு ஏற்பட்டிருக்கும் தொற்று டெல்டா வகையைச் சேர்ந்ததா என்பது பற்றிய ஆய்வுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து, அவர் வவுனியா மருத்துவமனையின் கொவிட் சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டு பின்னர், குருதி சுத்திகரிப்பு பிரிவில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில், சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, வவுனியா, சகாயாமாதாபுரம், வைரவர் கோவிலடி பகுதியில் மேற்கொள்ளப்பட்ட அன்டிஜென் பரிசோதனையில் ஏழு பேருக்கு கொவிட் தொற்று உறுதிசெய்யப்பட்டது. அவர்களில் முதுமையடைந்த ஒருவர் மருத்துவமனையில் சேர்க்கப்படுவதற்கு முன்னரே உயிரிழந்துவிட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. (த-110,18)

## அரச....

சேவைக்கு அழைப்பதற்கான நடைமுறையில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கமைய, அத்தியாவசிய சேவைக்குள் அடங்கும் அமைச்சுக்கள், நிறுவனங்கள், பகுதிநிலை அரச நிறுவனங்கள் மற்றும் அவற்றின் பிரதானிகளுக்கு அவசியமான அளவில் அதிகாரிகளையும், உத்தியோகத்தர்களையும் சேவைக்கு அழைக்க வேண்டும்.

அத்தியாவசிய சேவைக்குள் அடங்காத, அமைச்சுக்கள், நிறுவனங்கள் மற்றும் பகுதிநிலை அரச நிறுவனங்கள் ஆகியவை அதிகபட்சமாக வாரத்தில் இரண்டு நாள்கள் மாத்திரம் பணியாளர்களை சேவைக்கு அழைக்க முடியும்.

அதேவேளை, குறித்த பணியாளர்கள் வீட்டிலிருந்து பணியாற்ற முடியா விட்டால் மாத்திரமே, அவ்வாறு சேவைக்கு அழைக்க முடியும் என்று சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. (த-இ)

## வியாழேந்திரனின்...

ஒருவரே துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டார் என்று தெரிவிக்கப்பட்டது. மட்டக்களப்பு பிள்ளையாரடி பகுதியில், மென்டர்சன் வீதியில், இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரனின் வீடு உள்ளது. அங்கு இந்தச் சம்பவம் இடம்பெற்றது. அந்த வீட்டுக்குள், குறித்த நபர் அத்துமீறி நுழைய முற்பட்டார் என்றும், அதனாலேயே துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது என்றும் உத்தியோகப்பற்றற்ற தகவல்கள் தெரிவித்தன. படுகாயமடைந்த அந்த நபர், மட்டக்களப்பு போதனா மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டார். எனினும், சிறிது நேரத்தில் அவர் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. சம்பவத்தையடுத்து அங்கு விரைந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். குறித் பொலிஸ் உத்தியோகத்தர் கைதுசெய்யப்பட்டார். எனினும், சம்பவம் இடம்பெற்றபோது, இராஜாங்க அமைச்சர் அந்த வீட்டில் இருக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (த-இ)

## 174 கிலோ..

பொருள் மீட்கப்பட்டது. அதனைக் கடத்தினர் என்ற குற்றச்சாட்டில் இருவர் கைதுசெய்யப்பட்டனர். அவர்கள் பருத்தித்துறை மற்றும் முல்லைத்தீவைச் சேர்ந்தவர்கள். கடற்படையினர் மேற்கொண்ட சுற்றுக்காவல் நடவடிக்கையின்போதே இருவரும் கைதுசெய்யப்பட்டனர். மேலதிக சட்ட நடவடிக்கைக்காக கைதான இருவரையும் கடற்படையினர், வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர். கஞ்சா போதைப்பொருளும் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர். (த-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 450 பந்துப்பரிமாற்றங்களும் கட்டாயம் வீசப்பட வேண்டும்

## முன்னாள் வீரர்கள் கருத்து

சவுத்தாம்டன், ஜூன் 22

ஐ.சி.சி. டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதியாட்டம் மழையால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், மேலதிகமாக ஒருநாள் கொடுத்தால் போதாது. 450 பந்துப்பரிமாற்றங்கள் வரையில் ஆட்டம் நடத்தப்பட வேண்டும் என்று இந்திய, நியூசிலாந்து அணிகளின் முன்னாள் வீரர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் இந்திய அணியின் முன்னாள் வீரர் லக்ஷமன் தெரிவித்ததாவது:

ரசிகர்களுக்கு இது மிகவும் கவலை அளிக்கக்கூடியது. ஐ.சி.சி. சரியான விதிமுறையை கொடுக்கவில்லை என்று நினைக்கிறேன். ஐந்து நாட்களுக்கு 90 பந்துப்பரிமாற்றங்கள் வீதம் 450 பந்துப்பரிமாற்றங்களை முடிக்க வேண்டும். நான் இதை ஐ.சி.சியிடம் எதிர்பார்க்கிறேன். மேலதிகமாக ஒருநாள் இருப்பதால் நாங்கள் மகிழ்ச்சி அடைந்தோம். ஆனால், மழை தொடர்ந்து பெய்தால் அதற்குள் போட்டி முடிவடையுமா? என்று என்னால் உறுதியாக கூற இயலாது" என்றார். நியூசிலாந்து அணியின் முன்னாள் வீரர் ஷேன் பொண்ட் இவ்வாறான கருத்தையே முன்வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)



## டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதியாட்டம்

# நான்காவது நாளும் மழையால் பாதிப்பு!

சவுத்தாம்டன், ஜூன் 22

**ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் இறுதியாட்டத்தின் நேற்றைய நான்காம் நாள் ஆட்டம் ஒரு பந்துகூட வீசப்படாத நிலையில் மழையால் கைவிடப்பட்டது.**

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 217 ஓட்டங்களை முதல் இன்னிங்ஸுக்காகப் பெற்றது. அதிகபட்சமாக ரகானே 49 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் ஜெமிசன் 5 இலக்குகளை வீழ்த்தினார்.

பதிலுக்குக் களமிறங்கிய நியூசிலாந்து அணி நேற்றுமுன்தின மூன்றாம் நாள் முடிவில் 2 இலக்குகளை இழந்து 101 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. ரெய்லர், வில்லியம்சன் இருவரும் களத்தில் உள்ளனர். ஆட்டத்தின் 5ஆம் நாள் இன்றாகும். மழை காரணமாக ஆட்டம் கைவிடப்பட்ட வாய்ப்புகள் இருந்தமையால் ஏற்கனவே மேலதிகமாக ஒரு நாள் ஒதுக்கப்பட்டுள்ளது. இதனால் ஆட்டம் நாளைவரை செல்லலாம். (ம)



# இத்தாலியிடம் வீழ்ந்தது வேல்ஸ்

உரோம், ஜூன் 22

யூரோ கிண்ணத் தொடரில் நேற்று அதிகாலை இடம்பெற்ற ஆட்டத்தில் இத்தாலியிடம் போராடி வீழ்ந்தது வேல்ஸ் அணி.

ஆட்டத்தின் 39ஆவது நிமிடத்தில் மெத்தியோ பெசினா இத்தாலியின் சார்பாக முதலாவது கோலைப் பதிவுசெய்தார். அந்த அணியின் ஆதிக்கத்துடன் முதல் பாதி முடிந்தது.

இரண்டாவது பாதியில் பதிலடி கொடுக்க வேல்ஸ் பல முனைப்புக்களைக் காட்டியது. சில விரும்பத்தகாத சீண்டல்களையும் வெளிப்படுத்தியது. 55ஆவது நிமிடத்தில் வேல்ஸ் வீரர் எய்தன் அம்படு சிவப்பு அட்டை பெற்று மைதானத்தில் இருந்து வெளியேறினார்.

இது அந்த அணிக்குப் பின்னடைவாக அமைய முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது இத்தாலி. (ம)

# துருக்கியை அசத்தலாக வீழ்த்திய சுவிற்சர்லாந்து

சூரிச், ஜூன் 22

யூரோ கிண்ணத் தொடரில் நேற்று அதிகாலை நடைபெற்ற ஆட்டத்தில் துருக்கியை இலகுவாக வீழ்த்தியது சுவிற்சர்லாந்து அணி.



ஆட்டத்தின் 6ஆவது நிமிடத்தில் ஹரிஸ் செபிரோவிக் சுவிற்சர்லாந்தின் முதலாவது கோலைப் பதிவு செய்தார். செய்ரி 26ஆவது நிமிடத்தில் மற்றுமொரு கோலைப் பதிவுசெய்ய முதல் பாதியின் முடிவில் சுவிற்சர்லாந்து 2:0 என்று ஆதிக்கம் செலுத்தியது. இரண்டாம் பாதியின் 62ஆவது நிமிடத்தில் இர்பான் துருக்கியின் சார்பாக கோலைப் பதிவுசெய்தார்.

அடுத்த சில நிமிடத்தில் செய்ரி சுவிஸின் மூன்றாவது கோலையும் தனது இரண்டாவது கோலையும் பதிவுசெய்தார். இதையடுத்து 3:1 என்ற கோல் கணக்கில் வென்றது துருக்கி. (ம)

A/L Express பகுப்பாய்வு
பயணத்தடையிலும் வீடு வரல் /
English & Tamil
CHEMISRY இரசாயனம் Singam Master 076 056 5786
BIOLOGY உயிரியல் Naren Master 077 665 5290

வீடு வாடகைக்கு
யாழ் நகரில் மேல் வீடு வாடகைக்கு உண்டு.
4Room, மற்றும் 2Bath Room, 4Hall உடன்
வாடகை: 35000/-
அட்வான்ஸ்: 4 இலட்சம்
தொடர்பு : 076 034 4767

காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் ஆறுகால் மடத்தில் 1ம் ஒழுங்கையில் 18 பரப்புக் காணி விற்பனைக்கு. 2 பரப்பாக பிரித்து கொடுக்கப்படும். 1 பரப்பின் விலை 6 இலட்சம் மட்டும். (யாழ் மானிப்பாய் பிரதான வீதியில் இருந்து 100 m தூரம்)
தொடர்பு:
077 468 3354, 076 221 2037, 077 2880 152

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிடெற் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 22.06.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.